பெருந்தொகை

[முதல் ஐம்பது பாடல்கள் மூலமும் உரையும்]

1571

வெளியீடு:
தமிழ்ச் சங்கம், மதுரை.

பெருந்தொகை

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.
பாண்டியன் நூலகம்
செந்தமிழ்க் கல்லூரி.

உரையாசிரியர்:

வித்துவான் சீ. ஆழ்வாரையங்கார்

வெளியீடு:

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

முதற் பதிப்பு: 1935—36.
2-ஆம் பதிப்பு: ஆகஸ்ட் 1969.
பதிப்புரிமை உடையது.

விலை ரூ. *1—00*

Published by:
MADURAI TAMIL SANGAM,
Tamil Sangam Street, Madurai-1.
(TAMILNADU).

பதிப்புரை

'பெருந்தொகை' என்னும் இந்நூல், பல்வேறு காலங்களில், பல்வேறு சமயங்களில், பல்வேறு புலவர்கள் பாடிய பாக்களின் தொகுதியாகும். இதன் முதற்பகுதி 2214 செய்யுட்களையுடையது; கடவுள் வாழ்த்தியல், அறவியல், பொருளியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. பெரும் புலவர் மு. **இராகவையங்கார்** அவர்களால் தொகுக்கப்பெற்ற இது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் 1935—36-இல் வெளியிடப்பெற்றது. இந்நூலின் முதல் ஐம்பது பாடல்கள், வித்துவான் இறுதிநிலைத் தேர்வுக்கு, மதுரைப் பல்கலைக் கழகத்தினரால் பாடமாக வைக்கப்பெற்றுள்ளன. ஆதலின், இவ்வைம்பது பாடல்கள் மட்டும் உரை விளக்கத்துடன் வெளியிட்டுள்ளோம். உரை விளக்கம் தந்த வித்துவான் திரு. சி. **ஆழ்வாரையங்கார்** அவர்கட்கு எம் நன்றி. ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றேம்.

மதுரை,
12—8—69

கி. பழநியப்பன்
செயலர்.

செந்தமிழ்க் கல்லூரி
மதுரை
மதுரைத் தமிழ்ச் சங்கம்

பெருந்தொகை

மூலமும் உரையும்

முதலாவது

கடவுள் வாழ்த்தியல்

முதற்கடவுள்

1 பூமலை நீருறையுள் புள்ளேறு புட்கொடி
வாய்மைவே லாழி படைக்கலம்—நாமம்
பிரமன் இறைகண்ணன் பொன்றீக்கார் மேனி
கருமம் படைப்பழிப்புக் காப்பு.

(இ-ள்) (அயன் அரன் அரி என்னும் முதற் கடவுளர் மூவர்க்கும்) தாமரைப் பூவும் கைலை மலையும் பாற்கடலும் முறையே உறையுள்களாகவும், அன்னப் பறவையும், காளை மாடும், கருடப் பறவையும் முறையே கொடிகளாகவும், வாய்மையும், வேலும், சக்கரமும் முறையே படைக்கலங்களாகவும் பிரமன், இறை, கண்ணன் என்பன முறையே பெயர்களாகவும் பொன்னிறமும், தீப்போலுஞ் செந்நிறமும், மேகம் போலுங் கரு நிறமும் முறையே திருமேனிகளாகவும், படைத்தலும், அழித்தலும், காத்தலும் முறையே தொழில்களாகவும் ஆம்.

அயன், அரன், அரி என்னும் முதற் கடவுளர் மூவர்க்கும் உரிய உறையுள்களையும், கொடிகளையும், படைக்கலங்களையும், பெயர்களையும் திருமேனிகளையும், தொழில்களையும் முறையே கூறியிருத்தலின் இச்செய்யுள் முறை நிரனிறையணியாம். நேர் நிரனிறை அணியென்றும் கூறப்படும் வாய்மை-நிறைமொழி. அஃதாவது அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப் பொருளைப் பயந்தேவிடும் மொழி (குறள் 28 பரிமே).கண்ணன்

கரியவன் என்னும் பொருளில்வந்த பாகதச் சிதைவாய்த் திருமாலுக்கு வழங்கும்பெயராகும் (திருச்சிற்றம்பலக்கோவை 53 பேரா), இவ்வாறன்றி யாவர்க்குங் கண்ணுகவுள்ளவன் எனினும் ஆம். "யாதினும் உயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ணனென்றே, ஓதிய பொருட்குத்தானே யுறுபொருளுணர்த்திவிட்டான்" என்றூர் கம்பநாடரும் (கம்பரா - உலாவியல்-6). அட்சிணி புருடன் என்று வேதம் கடவுட்குவழங்கும் பெயரும் இப்பொருள் பற்றியதேயாம்

கந்தழி

2 சார்பினுற் றேன்றுது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பென்னின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.

(இ-ள்) தான் சார்ந்த பொருளினுல் வெளிப்படாமல் தான் உருவமில்லாததாய் எல்லாப் பொருள்கட்கும் சாருமிடம் என்று சொல்லும்படி இருந்து எப்பொழுதும் இன்பத் தன்மையையுடையதாகும். (எதுவென்றால்) வாய்ச்சொல்லினுலும், உடம்பினுலும், மனத்தினுலும் அறிய முடியாத தூயதன்மையையுடையதாகிய குற்றம் நீங்கிய ஒளிவடிவமாகிய கடவுட் பொருள். சார்பு-தொழிலாகு பெயர். தகைத்து-குறிப்புவினை முற்று. தீச்சுடர்-வினைத்தொகை.

கந்தழியாவது ஒரு பற்று மற்று அருவாய்த்தானே நிற்குந் தத்துவம் கடந்தபொருள்.

(பெருந்தேவபாணிவகை)

3 மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கும்
இருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்

செந்தழற்க ணுதலோனும் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயாய்
அளப்பரிய நான்மறையா லுணர்த்துதற் கரியோனே

(எட்டடித்தரவு)

(இ-ள்) கௌத்துவமணி விளங்கும் அழகிய மார்பினிடத்துச் சிறந்த தாமரைப்பூவில் உள்ளவளாகிய திருமகள் வீற்றிருக்க அணிகலமாக விளங்குஞ் சக்கரத்தையும் பால்போலும் வெண்ணிறத்தையுடைய சுரிந்தசங்கையும் இரண்டு கைகளிலுமேந்தியுள்ள திருமாலும் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமனும் இடது பாகத்தில் ஒப்பற்ற பசுமையாகிய கொடிபோன்ற உமாதேவி தங்கிய சிவந்த நெருப்பாகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும் ஆராயுமிடத்து நீயேயென்று கூறுபவர்க்கு அவரவர்தம் மனத்தில் அவ்வடிவமாகியும், அல்லாத வேறு வடிவமும் நீயேஎன்று (அவர்) கூறினால் அப்பிறவடிவங்களும் நீயேயாகியும் உள்ள அளக்க முடியாத நான்கு வேதங்களாலும் அறிவித்தற்கு அரியவனே?

எவ்வுயிர்க்கும் உயிரேயா யியங்குதனின் றொழிலாகி
அவ்வுயிர்க்கண் அடங்கியே யருளாது நிற்றலினால்
வெவ்வினைசெய் தவையுழந்து வெம்பிறவிக் கடலழுந்த
அவ்வினையை யகற்றாமல் நிற்பதுநின் னருளன்றே;
பல்லுயிரும் படைப்பதுநின் பண்பற்றே பகலினால்
வல்வினையின் வயப்பட்டு வருத்தங்கூர் உயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து நடுக்கஞ்செய் பகைநீக்கி
அல்லல்வா யழுந்தாம லகற்றுவதும் அருளன்றே;
அழிப்பதுநின் றொழிலென்றே யறைந்தாலு முயிரெல்லாம்
ஒழித்தவற்றுள் ளுணர்வுகளை ஒருவாம லுடனிருத்தி
பழிப்பின்றிப் பலகாலு மிப்பரிசே பயிற்றுதலின்
அழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே

(தரவின் பாகம் பற்றிய நான்கடித்தாழிசை)

எல்லாவுயிர்கட்கும், உயிராக இருந்து கொண்டு நடத்தல் உன்றொழிலாகி அந்த வுயிர்களிடத்து அடங்கியிருந்து அவற்றிற்கு அருள் செய்யாமல் இருத்தலினால் அவைகள் தீவினையைச் செய்து வருந்திக் கொடிய பிறவிக்கடலில் அழுந்த அத்தீவினையை நீக்காமல் இருப்பது உன் அருட்குணமல்லவே?

பலவுயுயிர்களையும் முகூர்த்தத்தில் படைப்பது உன் குணமல்லவா? தீவினையின் வயப்பட்டு வருத்தமிக்க அவ்வுயிர்களை நல்வினையையே செய்யப்பழக்குவித்து நடுக்கத்தைச் செய்யும் அவ்வினைப் பகையை நீக்கித் துன்பத்தில் அழுந்தாமல் நீக்குவதும் உன் அருட்குணமல்லவா?

அழித்தலைச் செய்வது உன் தொழிலென்று கூறினாலும் உயிர்களெல்லாவற்றையும் (உடம்பினின்றும்) நீக்கி, அவற்றின் உள் உணர்வுகளை அவற்றுடன் இருக்கச் செய்து பலமுறையும் இத்தன்மையாகவே பழக்குதலால் நீ அழிப்பதும் இல்லை; அவ்விடத்து அதுவும் உன் அருளல்லவா?

(தரவின்பாகம் பற்றிய நான்கடித்தாழிசை)

வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை
வினையி னீங்கி விழுத்தவம் செய்யும்
முனைவர் தமக்கு முத்தி யாயினை (ஈரடியிரண்டு)

யாகங்களைச் செய்து முறைப்படி நடந்த தாழ்வில்லாத அந்தணர்தம் செயலாயுள்ளாய். நல்வினை தீவினையைவிட்டு நீக்கித் சிறந்த தவத்தைச் செய்யும் முனிவர்களுக்கு முத்தியாகவுள்ளாய்.

இலனென விகழ்ந்தோர்க் கில்லையு மாயினை;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை;
அருவுரு வென்போர்க் கவையு மாயினை;
பொருவற விளங்கிய போத மாயினை; (ஓரடி நான்கு)

(இ-ள்) கடவுள் இல்லையென்று இகழ்ந்தவர்களுக்கு இல்லாதவனும் ஆயினை. கடவுள் உள்ளான் என்று உணர்ந்தவர்க்கு உள்ளவனும் ஆயினை. உருவமில்லாதவன், உருவமுள்ளவன் என்று கூறுபவர்க்கு அவையாகவும் ஆயினை; ஒப்பில்லாமல் விளங்கிய அறிவும் ஆயினை;

பானிற வண்ணனீ; பனிமதிக் கடவுணீ;
நீனிற வுருவு நீ; நிறமிகு கனலி நீ;
அறுமுக வொருவனீ; ஆனிழற் கடவுணீ;
பெறுதிரு வுருவுநீ; பெட்பன பிறவுநீ; (இருசீ ரெட்டு)

(இ-ள்) பால் போலும் வெண்ணிறத்தையுடைய பலபத்திரனும் நீயே; குளிர்ந்த திங்களாகிய கடவுளும் நீயே; நீலநிறத்தையுடைய வடிவை உடையவனும் நீயே; செந்நிறமிக்க தீக்கடவுளும் நீயே; ஆறு முகங்களையுடைய ஒப்பற்றவனாகிய முருகக் கடவுளும் நீயே; கல்லாவின் கீழமர்ந்துள்ள தக்கிணமூர்த்தியும் நீயே; இலக்குமியை அடைந்துள்ள வடிவமாகிய திருமாலும்நீயே; விரும்புவனவாகிய மற்றவைகளும் நீயே!

மண்ணுநீ; விண்ணும்நீ; மலையும்நீ; கடலுநீ;
எண்ணுநீ; எழுத்துநீ; இரவும்நீ; பகலுநீ
பண்ணுநீ; பாவுநீ; பாட்டுநீ; தொடருநீ
அண்ணனீ; அமலனீ; அருளுநீ; பொருளுநீ
(ஒருசீர் பதினாறு)

(இ-ள்) நிலனும், ஆகாயமும், மலையும், கடலும், கணிதமும், இலக்கணமும், இரவும், பகலும், பண்ணும், பாவும், பாட்டும், தொடர் மொழியும், பெருமையுடையவனும், குற்றமற்றவனும், அருளும் பொருளும் நீயே ஆவாய்.

ஆங்க-(தனிச்சொல்)

இனையை யாகிய இறைவனின் னடியிணி
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுதும்

மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லாம்
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி
முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவா முத்தியை
மயலற வளித்தநின் மலரடி
அரிய வென்னு யுரிதினிற் பெறவே. (சுரிதகம்)

(இ-ள்) இத்தன்மையை யுடையவனாகிய கடவுளே! உன் திருவடி இரண்டையும் தலையின்மேல் வைத்துக்கொண்டு பல நாட்கள் துதிப்போம். பரந்த இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம் பொருந்திய பிறவியை நீக்க விரும்பி முதிர்ந்த ஆசையோடு கோபத்தையும் நீக்கி முனித் தன்மையை யுண்டாக்கிய, கெடாத வீட்டை மயக்கம் நீங்கக் கொடுத்த உன் தாமரை மலர்போன்ற திருவடிகளை உரிமை யுடையதாக அடைவதற்கு அருமையுடையனவென்று கூறுய். (உடனே தருவாய்)

(வி-உரை) தேவர்ப்பராவுதலுடைய பாட்டைத் தேவ பாணியென்பர். பாணி-பாட்டு (சிலப். 6, 35). அது பெருந்தேவ பாணி, சிறு தேவபாணி என இரு வகைத்து. இச்செய்யுள் பெருந்தேவ பாணிவகை. மணி-கௌத்துவம் (2-3) திருமாலின் மார்பில் உள்ளது. ''விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி...... நன்னிறமேகம் நின்றதுபோல'' (சிலப். 11, 13-6) எனச் சங்கு சக்கரங்களுடன் கூடிய திருமாலுக்கு இளங்கோவடிகள் கூறிய உவமை ''பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கும், இரு சுடர்போல் இருகரத்திலேந்தியமர்மாயோனும்'' என்ற அடிக ளோடு ஒப்பிடற்பாலது. ''எவ்வுயிர்க்கும் உயிரேயாய் இயங்கு தல்'' என்றது விட்ணு சப்தத்தின் பொருளை விளக்கியவாறு; 'விரிந்தெங்குஞ் சென்றமையால் விண்ணுவுமாய்' என்றூர் பிற ரும். (பெருந்தொகை 170). பகலினுற் படைப்பது என இயைக்க. பகலினுல்-முகூர்த்தத்தில். 'மூவுருவாகிய தலைபிரி

யொருவனை' (பரிபா. 13-37) என்றவாறு திருமால் முக்குணங்களின் வேறுபாட்டால் மும்மூர்த்திகளாக நின்று தொழிலடத் துதல் மூன்று தாழிசைகளாலுங் கூறப்பட்டது (29). பானிற வண்ணன்-பலபத்திரன். ஆல் நிழற் கடவுள்-கல்லாலின் கீழ் அமர்ந்துள்ள தக்கிணாமூர்த்தி. முனிமை-முனித்தன்மை. "முனிமை முகடாய மூவாமுதல்வன்" (சீவக. 1609) எனக் காண்க. பசுங்கொடி-பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் உமாதேவியைக் குறித்தது.

4 நல்லார் வணங்கப் படுவான்பிறப் பாதிநான்கும்
இல்லா னுயிர்கட் கிடர்தீர்த்துயி ரின்ப மெய்துஞ்
சொல்லான் தருமச் சுடரோனெனுந் தொன்மையினான்
எல்லா முணர்ந்தா னவனேயிறை யாக வேத்தி.

(இ-ள்) நல்லவர்களால் வணங்கப்படுபவனும் பிறப்பு முதலிய நான்கும் இல்லாதவனும் உயிர்கட்குத் துன்பத்தை நீக்கி அவ்வுயிர் இன்பம் எய்துதற்குரிய நூல்களைச் செய்தவனும் தரும சொரூபியாகிய ஒளியையுடையவன் என்று சொல்லப்படும் பழமையை உடையவனும் எல்லாம் அறிந்தவனும் புத்த தேவனைக் கடவுளாகத் துதித்து.

இச் செய்யுள் நீலகேசிக் காப்புச் செய்யுள். பிறப்பாதி நான்கு—பிறப்புப் பிணி மூப்பிறப்பு என்பன. (குறள் 266, 262, 370 பரிமே.) 'பிறத்தலு மூத்தலும் பிணிப்பட்டிரங்கலும் இறத் தலுமுடையது, என்பது மணிமேகலை. (16, 136-8) உயரின்பம் என்றும் பாடம்.

5 புகலிரும் பனிச்சோலைப் பொன்மலைபோற் பொலிந்திரங்கி
யகல்விசும்பிற் சுடர்மாட்டி யைம்பூத மகத்தடக்கி
மண்ணகத் திருணீங்க மன்னுயிர் படைத்தக்கால்
அண்ணவேற் றெழிலூர்தி யருமறை முதல்வனும்
தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்றாய் வானவில் லனையரே.

(இ-ள்) சொல்லப்படுகின்ற குளிர்ந்த சோலையையுடைய பொன்மலைபோலப் பொலிவுற்று விளங்கி அகன்ற ஆகாயத்தில் ஞாயிறு திங்கள் இரு சுடர்களையும் பொருத்தி, மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களையும் உள்ளடக்கிப் பூமியிலுள்ள இருணீங்கும்படி நிலைபெற்ற உயிர்களைப் படைத்தபொழுது, பெருமை பொருந்திய இடபமாகிய ஊர்தியையுடைய சிவபெருமானும் அரிய மறைக்குத் தலைவனாகிய பிரமனும், குளிர்ந்த நல்ல மணக்கின்ற துளசி மலையையணிந்த தாமரைபோன்ற கண்களையுடைய திருமாலும் நிறம் வேறுபட்டு உடம்பு ஒன்றாகி வானவில்லை ஒத்திருப்பர்.

திருமால்

6 என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்றும் எனக்கே பிரானாவான்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமும்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

(இ-ள்) எக்காலத்தும் நான் திருமாலுக்கே அடிமையாவேன். எம்பெருமானாகிய திருமாலே எனக்குத் தலைவன் (ஆண்டவன்) ஆவான். எக்காலத்தும் பிறவாத பெருமையுடைவனாகிய அத்திருமாலின் ஆயிரம் பெயர்களையும் சொல்லி என் வாய் மறவாது வாழ்த்துவதாக.

7 வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறாய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழிந்த—மேன்மை
அரியே யனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை.

(இ-ள்) தேவர்கள் வணங்கி ஏவல் கேட்க, பகையாகிய அசுரர்களுடைய சுற்றத்தைத் தொலைத்து நீங்கிய, மேன்மை

யையுடைய திருமாலே எல்லா உலகங்களையும் காக்கும் கடவுளாவான். தீக்கடவுளே அந்தணர்க்குத் தலைவனுவான்.

அரி - திருமால், எரி - தீக்கடவுள்

8 விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானுச்
சுரநதிபாய் உச்சி தொடுத்த — அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்பெரு நாவா
யாம்பொலிவிற் றுயினதா லன்று.

(இ-ள்) (திருமால் உலகளந்த காலத்து) நான்முகன் (பிரமன்) மீகாமனுகவும், கங்கை பாயாகவும், உச்சியிற் பொருந்திய திருமாலின் திருப்பாதமே பாய்மரமாகவும் விரிந்த கடல் சூழ்ந்தபூமி நாவாயாகவும் விளங்குதலை யுடையதாயிற்று.

மீகாமன் - மேலிடத்திலிருப்பவன்—கப்பலைச் செலுத்தும் மாலுமி. சுரநதி—கங்கை, நாவாய்—கப்பல், மேதினி நாவாயாம் பொலிவிற்றென இயையும்.

9 வானுகி மண்ணுய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனுகிப் பாலாந் திருமாலே—ஆனுயா?
வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.

(இ-ள்) ஆகாய மாகியும், பூமியாகியும், அலைகள் மடங்கும் கடலாகியும் தேனுகியும், பாலாகியும் இருக்கின்ற திருமாலே பசுக்களை மேய்க்கும் இடையனே! முன்னொரு காலத்தில் மண்ணையுண் டுமிழ்ந்த வயிறு வெண்ணெயை விழுங்குதலால் நிறையுமோ? (நிறையாது)

இது பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியின் 92-ஆம் பாசுரமாகும். ஆன்ஆயன்-பசு மேய்க்கும் இடையன்.

10 வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாளெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ—தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

(இ-ள்) கன்றையெடுத்து விளாமரத்தின் மேலெறிந்தும், கனிகளையுடைய விளாமரத்தின் காயைச் சிந்தியும், கோவர்த்தன மலையை யெடுத்தும், வண்டுகள் பொருந்திய மாலையையுடைய யசோதையின் வாள் போன்ற நீண்ட கண்களைப் போயடைந்த நோக்கம் நின்ற நிலையை இனிப்பெறுவது எக்காலமோ?

ஆய்ச்சியின் நோக்கம் நின்ற நிலையை இனிப் பெறுவது என்றுகொல் என இயையும். கஞ்சனால் ஏவப்பட்டு விளா மரத்தின் வடிவு கொண்டு, கண்ணன் தன் கீழ்வரும்பொழுது அவன்மேல் விழுந்து கொல்லக் காத்திருந்த கபித்தாசுரனையும் அவ்வாறே தன்னை முட்டிக்கொல்லும் பொருட்டுக் கன்று வடிவுடன் வந்த வற்சாசுரனையும் ஒரு சேர முடித்தற் பொருட்டு அப்பிரான் அக்கன்றின் பின்னிரண்டு கால்களையும் பிடித்தெடுத்துச் சுழற்றி விளவின்மேல் எறிய அவ்விருவடிவினரான அசுரரும் ஒருங்குமாய்ந்தனர் என்பது புராண வரலாறு.

ஒரு காலத்தில் இந்திரன் செருக்கை அடக்கும் பொருட்டு அவனுக்குச் செய்ய வேண்டிய பூசையைக் கண்ணன் பசுக்களுக்குப் புல் முதலியன கொடுத்துக் காக்கும் கோவர்த்தன மலைக்குச் செய்யுமாறு கட்டளையிட, இடையர்களும் அவ்வாறே செய்ய இந்திரன் வெகுண்டு பசுக்களும் இடையர்களும்வருந்துமாறு கனமழை பெய்விக்கக் கோவர்த்தன மலையை யெடுத்துக் குடையாகப் பிடித்துப் பசுக்களையும் இடையர்களையும் பாது காத்தான் என்பது குன்றெடுத்தவரலாறாகும். (விரிவு அடுத்த பாட்டுரையிற்காண்க)

(வினைதிரனிறை)

11 இறுத்தொசித் தட்டுதைத் தேந்திப்போழ்ந் தாடிப்
பறித்தெறிந் தூர்ந்தணைந்து காத்தான்—செறுத்த
விடைகுருந்த மல்லனுருண் மலைமா கூத்துப்
படைவிளவு புட்பாம் பினம்.

(இ-ள்) இயத்தையும் குருந்தமரத்தையும், மல்லனையும் சகடாசுரனையும், கோவர்த்தன மலையையும், குதிரை வடிவான கேசியென்ற அசுரனையும், கூத்தையும் (கஞ்சன் யானையாகிய குவலயா பீடத்தின் கொம்பையும், விளாமரக்கிளையையும், கருடப் பறவையையும், ஆதிசேடனாகிய பாம்பையும், ஆனிரையையும் முறையே இறுத்து, ஒசித்து (ஒடித்து), அட்டு (அழித்து) உதைத்து, ஏந்தி, பிளந்து, ஆடி, பறித்து, எறிந்து, ஊர்ந்து (மேலேறிச் செலுத்தி) அணைந்து, காத்தான்.

விடையிறுத்தவரலாறு:- யசோதையின் தமயனாகிய கும்பகனுக்கு நப்பின்னைஎன்றபெண்ணிருந்தாள். அவள்பெதும்பைப் பருவமடைந்தாள். அப்பொழுது காலநேமியின் புதல்வர்கள் எழுவர் விடையுருவங்கொண்டு கும்பகன் பசுக்கூட்டத்திற் சேர்ந்து பலதீச்செயல்களை இழைத்து வந்தனர். கும்பகன் இவ்விடையேழையும் அடர்த்தவர்க்குத் தன்மகளைக் கொடுப்பதாகக் கூறினன். கண்ணன் அவ்விடை ஏழையும் இறுத்து நப்பின்னையை மணந்தான் என்பது. குருத்தம் ஒசித்த கதை:- கண்ணபிரானைக் கொல்லும் பொருட்டுக் கம்சனால் ஏவப்பட்ட பல அசுரர்களில் ஒருவன், அக்கண்ணபிரான் மலர் கொய்தற் பொருட்டு விரும்பியேறும் குருந்தமரமொன்றில் பிரவேசித்து அப்பெருமான் வந்து தன்மீது ஏறும்பொழுது தான் முறிந்து வீழ்ந்து அப்பெருமானை வீழ்த்திக்கொல்லக் கருதியிருந்த சமயம், மாயவனான கண்ணபிரான் அம்மரத்தைப் பிடித்துத் தன்வலிமை கொண்டு முறித்து அழித்தான் என்பதாம். மல்அட்ட வரலாறு:— கம்சனால் வலிய அழைக்கப்பட்டுக்

கிருட்டிண பலராமர்கள் அவனது சபையில் செல்லுகையில் அவர்களை எதிர்த்துப் பொருது கொல்லும்படி கம்சனால் ஏவப் பட்ட சாணூரன், முட்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்தெதிர்த்துப் பலமாகப் போர்செய்ய அவர்களையெல்லாம் அவர்கள் மற்போரினாலே கொன்று வென்றனர் என்பதாம்.

கண்ணன் பாண்டவ தூதனாய்த் துரியோதனனிடம் சென்றபொழுது துரியோதனன் இரகசியமாய்த் தன் சபா மண் டபத்தில் மிகப் பெரிய நிலவறையொன்றைத் தோன்றுவித்து அதில் அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாக உள்ளே இருக்க வைத்து, அக்குழியைப் பிறர் அறியாதபடி மூங்கிற் பிளப்புக் களால் மேலேமூடி அதன்மேல் சிறந்த இரத்தினாசனம் ஒன்றை யமைத்து, அவ்வாசனத்திற் கண்ணனை வீற்றிருக்குமாறு சொல்ல, அங்ஙனமே கண்ணன் அதன்மேல் ஏறின மாத்திரத் தில் மூங்கிற் பிளப்புக்கள் முறிபட்டு ஆசனம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில் அப்பெருமான் மிகப் பெரிய விசுவரூபமெடுத்து அம்மல்லர்களை அழித்தனர் என்ற கதையை யுங்கொள்ளலாம்.

உருள் - சகடம். அதனை யுதைத்த வரலாறு:— நந்த கோபன் இல்லில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்தில் தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த கண்ணன் ஒருகால் அச்சகடத்தில் கம்ச னால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன் வந்து ஆவேசித்துத் தன் மேலே விழுந்து தன்னைக் கொல்ல முயன்றதை யறிந்து பாலுக்கு அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைத்தருள அவ்வுதைபட்ட மாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரன் உள்பட அழிந்தது என் பதாம்.

மலையை ஏந்திய வரலாறு:— திருவாய்ப்பாடியில் ஆயர்க ளெல்லாருங் கூடி மழையின் பொருட்டு இந்திரனை ஆராதித் தற்கென்று வழக்கப்படி அமைத்த சோற்றைக் கண்ணபிரான்

ஒருகால் அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தன மலைக்கு இடச்சொல்ல, தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அமுது செய்தருள அவ்விந்திரன் கோபத்தோடு புட்கலாவர்த்த முதலிய பல மேகங்களை யேவிக் கண்ணன் விரும்பி மேய்க்கின்ற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு நண்பரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படிக்கன மழையை ஏழு நாள் இடைவிடாது மழை பெய்வித்தபொழுது கண்ணன் கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து எல்லா வுயிர்களையுங் காத்தருளினன் என்பதாம்.

மா - குதிரை. குதிரை வடிவான கேசி என்ற அசுரன். அவனைப் பிளந்த வரலாறு:— கம்சனால் ஏவப்பட்ட அசுரர்களிற் கேசியென்பவன் குதிரையி னுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணபிரான் மேற் பாய்ந்துவர அப்பெருமான் தன் திருக்கதையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களை யுதிர்த்து உதட்டைப் பிளந்து அவனுடம்பையும் இரு பிளவாக வகிர்ந்து தள்ளினன் என்பதாம்.

கூத்து ஆடின வரலாறு:- யமுனா நதியில் ஓர்மடுவில் இருந்துகொண்டு அம்மடுமுழுவதையும் தன் விடத்தீயால் கொதிப்படைந்த நீருள்ளதாய்க் குடிப்பதற்குத் தகுதியாகாதபடி செய்துவந்த காளியன் என்னும் கொடிய ஐந்துதலை நாகத்தைக் கண்ணபிரான் தண்டிக்க வேண்டுமெனத் திருவுளங்கொண்டு அம்மடுவிற்கு அண்மையிலுள்ளதொரு கடம்பமரத்தின் மேலேறி, அம்மடுவிற்குதித்துக் கொடிய அந்நாகத்தின் படங்களின் மேல் ஏறித்துவைத்து நர்த்தனம் செய்து நடுக்கி வலியடக்குகையில் தாலிப் பிச்சை தந்தருளவேண்டுமென்று தன்னை வணங்கிப் பிரார்த்தித்த நாககன்னிகைகளின் வேண்டுகோளின்படி அக்காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளினன் என்பதாம்.

படை - ஈண்டு யானைமருப்பு. அவ்வரலாறு வருமாறு:- வில்விழா வென்கிற வியாசம் வைத்துக் கம்சனால்•வரவழைக்கப் பட்டுக் கண்ணனும் பலராமனும் கம்சன் அரண்மனை நோக்கிச் செல்லுகையில் அவனது அரண்மனைவாயிலில் வழியில் தம் மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயா பீடம் என்னும் மதயானை கோபித்து வர அவ்யாதவீரர் அதனை எதிர்த்து அதன் தந்தங்கள் இரண்டையும் பறித்து அவற் றையே ஆயுதமாகக் கொண்டு அவற்றால் அடித்து அவ் யானையை உயிர்தொலைத்து விட்டு உள்ளே போயினர் என்ப தாம்.

விளவு எறிந்தகதை முன் பாட்டில் கூறப்பட்டது.

புள்ளூர்ந்து என்பதால் அப்பெருமான் கருடப் பறவையின் மேல் ஏறிச் செலுத்தல் குறிக்கப்பட்டது.

பாம்பணைந்து என்பதால் அவன் பாம்புப் படுக்கையில் பள்ளிகொள்ளல் குறிக்கப்பட்டது. இனம்•பசுக்கூட்டம். இனந்தாத்தான் என்பதால் அவன் பசுக்கூட்டங்களைப் பாது காத்தல் கூறப்பட்டது. 'ஆயர் இனங்காப்பார்' (கலித் 143.) என வழங்குவதுங் காண்க

12 உண்டோர்ந் துதைத்தழித் தூதிக்காத் தேற்றளந்து
கொண்டெடுத்து வாய்போழ்ந்து சென்றாக்கி—
கண்டறுத்தான்
பேய்முலை புட்சகடஞ் சோகோடான் நீர்நிலம்
பூமலைமா தூதமிர்த நஞ்சு.

(இ-ள்) பேயாகிய பூதனை முலையையும், கருடனையும், சகடாசுரனையும் வாணன் நகரான சோணிதபுரத்தையும், சங் கையும், பசுக்களையும், நீரையும், நிலத்தையும், பூதேவியையும், கோவர்த்தன மலையையும் குதிரைவடிவான கேசியையும், தூதையும், அமுதத்தையும், நஞ்சையும் முறையே உண்டும்,

ஊர்ந்தும், உதைத்தும், அழித்தும், ஊதியும், காத்தும். ஏற்றும், அளந்தும், கொண்டும், எடுத்தும், வாய் போழ்ந்தும், சென்றும், ஆக்கியும், கண்டும், நீக்கியும் செயல் புரிந்தான்.

பேய் முலையுண்ட வரலாறு:— கண்ணனைப் பெற்ற தேவகியினது உடன் பிறந்தவனும் அக்கண்ணபிரானுக்கு மாமனும் ஆகிய கம்சன் தன்னைக் கொல்லப் பிறந்த தேவகியின் புத்திரனாகிய கண்ணன் ஒளித்து வளர்தலையறிந்து அக்குழந்தையை நாடியுணர்ந்து கொல்லும் பொருட்டுப் பல அசுரர்களையேவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் அரக்கி நல்ல பெண்ணுருவத்தோடு இரவில் திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குத் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனாகிய குழந்தையை யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிப முலையைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானான அக்குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப் பிடித்துப் பாலுண்ணும் பாவனையில் அவளுயிரையும் உறிஞ்சி, அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி, உடம்பு நரம்புகளின் கட்டுகளெல்லாம் நீங்கி விழுந்திறக்கும்படி செய்தனன் என்பதாம

புள்-பறவை கருடப் பறவையைத் திருமால் ஊர்வது யாவரும் அறிந்ததே. சகடம் உதைத்த வரலாற்றையும் மாவாய் போழ்ந்தவற்றையும், மலை எடுத்த வரலாற்றையும் முன் பாட்டின் விசேடவுரையிற் காண்க.

சோ-வாணன்நகராகிய சோணிதபுரம். அதனைக் கண்ணன் அழித்த வரலாறு:- பலிச் சக்கரவர்த்தியின் சந்ததியிற் பிறந்தவனாகிய வாணாசுரன் ஒருகாலத்துச் சிவபிரான் நடனத்தைத் தெரிசித்து அதற்குத் தனது இரண்டுகைகளால் மத்தளங் கொட்ட, சிவபிரான் அருள் கூர்ந்து அவனுக்கு ஆயிரங் கைகளையும். நெருப்பு மதிலையும், அளவில்லாத வலிமையையும், மிக்க செல்வத்தையும், தன் சுற்றத்தோடு அவன் மாளிகை வாவல் செய்திருத்தல் முதலிய வரங்களையுந் தந்தருளினான்.

அப்பாணன் பெண்ணாகிய உசை யென்பவள், கண்ணன் பேரனாகிய அநிருத்தனைக் கனவிற் கண்டு அவனிடத் தாசை கொண்டு தன் உயிர்த் தோழியாகிய சித்திரலேகையால் அவனைத் தூக்கி வரச்செய்து இன்பம் அநுபவித்துக் கட்டிப்போட்டிருக்க, துவாரகையில் அநிருத்தனைக் காணமல் கலங்கி, நாரத முனிவரால் நடந்த வரலாற்றை யறிந்த கண்ணபிரான் அவன் பாணபுரமாகிய சோணிதபுரஞ்சென்று, காவலாக இருந்தவரையும் அவனையும் வென்று சோணிதபுரத்தை அழித்து அநிருத்தனை மீட்டு வந்தனர் என்பதாம்.

கோடு-சங்கு. சங்கூதிய வரலாறு வருமாறு:- கண்ணபிரான் நரகாசூரனைக் கொன்று அவன் முன் கவர்ந்து சென்ற இந்திரன் தாயான அதிதியின் குண்டலங்களை அவளுக்குக் கொடுக்கச் சத்தியபாமையுடன் தேவலோகம் செல்ல, அங்கு சத்தியபாமைக்கு பலவித உபசாரங்களைச் செய்த இந்திரன் தேவர்க்கேயுரிய பாரிசாத மலரை மானிடப் பெண்ணாகிய அவளுக்குத் தரலாகாதென்று தாராதிருக்க, சத்தியபாமை கேட்டுக் கொண்டபடி பாரிசாத தருவைக் கண்ணபிரான் தூக்கிப் பெரிய திருவடியின் மேல் வைத்தபோது, இந்திராணியின் தூண்டுதலால் தம்மோடு போருக்குவந்த இந்திரனைப் படைகளுடன் சங்கொலியால் பங்கப்படுத்திப் பின்பு பாரிசாதத்தைத் துவாரகைக்குக் கொண்டுவந்து சத்தியபாமை வீட்டுப் புறங்கடைத் தோட்டத்தில் நாட்டியருளினன்.

ஆன்-பசுக்கள். கண்ணன் அவைகளை மேய்த்துப் பாதுகாத்தல் யாவரும் அறிந்ததே.

நீர் ஏற்ற வரலாறு;— திருமால் தேவர்களின் பொருட்டு வாமன வடிவங்கொண்டு மாவலியினிடம் சென்று மூவடி மண் வேண்டியபொழுது அவ்வசுரன் அங்ஙனமே கொடுக்கத் துணிந்து தாரைவார்த்துக் கொடுக்க, அதனைக் கையால் ஏற்றான் என்பது.

நிலம் அளந்த கதை:— மேற்கூறியவாறு மாவலி தாரை வார்த்து மூவடி மண் கொடுத்ததும் அந்நீரைக் கையால் ஏற்று உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து ஓரடியால் பூலோகத்தையும் மற்றோரடியால் மேல் உலகத்தையும் அளந்து, மற்றோரடி நிலத்திற்கு இடமின்றாகவே அதற்காக அவன் வேண்டுகோளின்படி அவனது முடியில் அடியை வைத்து அவனைப் பாதாளத்தில் அழுத்தி அடக்கினன் என்பதாம்.

பூக் கொணர்ந்த வரலாறும் சங்கூதிய வரலாறும் ஒன்றே. மலையெடுத்த வரலாறு முன் செய்யுளில் (11 பாட்டில்) கூறிய மலையை ஏந்திய வரலாற்றானறிக.

அமிர்தம் ஆக்கிய கதை:— முன்னொரு காலத்து விட்டுணுவின் உலகஞ் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒரு பூமாலை பெற்ற ஒரு வித்தியாதர மகள் பிரமலோகம் வழியாய்த் திரும்பி வர, துர்வாச மகாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க, அவள் அம்முனிவனுக்கு அம்மாலையை அளித்தாள். அதனைத் தலைமேற்கொண்டு அம்முனிவன் தேவலோகம் வந்து, அப்பொழுது ஐராவத யானைமேல் பவனிவந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அதை அளிக்க அதனை அவன் அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரியின்மேல் வைத்த அளவில் அது துதிக்கையால் எடுத்துக் கீழே எறிந்து காலால் மிதித்துத் துவைத்தது. அதுகண்ட முனிவன் கோபங்கொண்டு இந்திரனை நோக்கி, இவ்வாறு செல்வச் செருக்குக் கொண்ட உன் செல்வம் அனைத்தும் கடலில் ஒளித்துவிடக்கடவன எனச் சபிக்க, செல்வம் அனைத்தும் ஒழிந்தன. பின் இந்திரன் திருமாலை வேண்டி அவர் கட்டளைப்படி அசுரர்களையும் துணையாகக்கொண்டு மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் மாநாகத்தைக் கடை கயிறாகப் பூட்டிப் பாற்

கடலைக் கடைந்தபொழுது பல பொருள்களோடு அமிர்தமும் வெளிப்பட்டது.

கண்ணன் பாண்டவர்க்குத் தூதுசென்ற வரலாறு:— பஞ்சபாண்டவர் பன்னிரண்டாண்டு காட்டிலும், ஓராண்டு ஒருவரும் அறியாதபடி நாட்டிலும் வசித்துக் கழித்துவிட்டு வந்தபின் துரியோதனனிடம், முன்கூறியபடியே பாண்டவருடைய நாடு நகரங்களைத் தருகிருயா? இலையேல் போருக்கு வருகிருயா? என்று கேட்டுவருமாறு கண்ணபிரானைத் தூது போகுமாறு வேண்ட, அப்பெருமானும் அவர்கள் வேண்டு கோட்கிணங்கித் தூது சென்ருர் என்பது.

நஞ்சைக் கண்டழித்த கதை:- யமுனு நதியில் இருந்து கொண்டு அம்மடுமுழுவதையும் தன் விடத்தீயால் கொதிப் படைந்த நீருள்ளதாய்க்குடிப்பதற்குத்தகுதிஇல்லாதபடி செய்த காளியன் என்னும் கொடிய பாம்பைக் கண்ணபிரான் தண்டிக் கத் திருவுளங்கொண்டு அம்மடுவின் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின் மேலேறி அம்மடுவிற்குதித்த பொழுது அப் பாம்பின் விடத்தீயால் எரிக்கப்பட்ட அம்மரம் கண்ணனது திருவடிபட்ட மாத்திரத்தில் விடத்தீயின் கொடுமை நீங்கித் தளிர்த்தது என்பதாம்.

13 பேய்முலை வியன்ஞாலம் பூங்குருந்த மதவேழம்
வாய்மருப் பெழிலேறு வாட்கண்ணார் குரவைச்சீர்
உண்டானு மளந்தானு மொச்சித்தானுங் காத்தானுங்
கொண்டானுங் கொடுத்தானுங் கொடியுவணத் தானரோ.

(இ-ள்) பூதனை யென்னும் பேய்முலையையும் அகன்றபூமி யையும், பூவையுடைய குருந்தத்தையும் மதத்தையுடைய கஜேந்திரன் என்னும் யானையையும் கம்சனுடைய குவலயா பீடம் என்னும் யானையின் மருப்பையும் அழகையுடைய வான்

போன்ற கண்களையுடையவர்களாகிய இடைச்சியர்க்குக் குர வைக் கூத்தின் தாளத்தையும் முறையே உண்டானும், அளந் தானும், ஒசித்தானும், காத்தானும், கொண்டானும், கொடுத் தானும் உவணக் (கருடக்) கொடியையுடைய திருமாலே யாவான்.

மதவேழங் காத்த கதையல்லாத மற்றைக்கதைகளையெல் லாம் 11, 12ஆம் பாடல்களின்விசேடவுரையிற்காண்க. குரவை- மகளிர் எழுவரேனும் எண்மரேனும் கைகோத்தாடுங் கூத்து. சீர்- தாளம்

தேவபாணி வகை

14 உறைபதியி னுடனயனை உந்தியாற் படைத்தோயும்
அறைகடல்சூழ் நிலமுதலா வளைத்துலகும் புரப்போயும்
திருநிறமே கரிபோகத் திருமேகம் பயந்தோயும்
ஒருநிறமே நிறமாக வொள்ளெரியை உயிர்த்தோயும்
மறுவித்து மார்பென்ன மலர்மகளை வைத்தோயும்
நிறத்தோடு நெஞ்சொத்த நிலமடந்தை கணவனு நீ.

இது தரவு.

(இ-ள்) பிரமன் உறைகின்ற பதியாகிய உந்தித் தாமரை யோடு பிரமனை உந்தியாற் படைத்தவனும், ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த மண் முதலாகிய எல்லா வுலகங்களையும் பாதுகாப்பவ னும் தன்னுடைய நிறமேபோலக் கருமையாக அழகிய மேகத் தைப் படைத்தவனும் தன்னுடைய (சிவ வடிவத்திலுள்ள) செந்நிறமே நிறமாகும்படி ஒளிபொருந்திய நெருப்பைப் படைத் தவனும் மறுவைவித்திய மார்பு என்று சொல்லும்படி திருமகளை மார்பில் வைத்தவனும் உள்ளும் புறமும்' ஒத்த ஒரு தன்மையளாகிய பூமியாகிய பெண்ணுக்குக் கணவனும் நீயேயாவாய். ஒருநிறம் என்றது தன்சிவவடிவத்திலுள்ள செந்நிறத்தையாம் நிறத்தோடு நெஞ்சொத்த உள்ளும்புறம்பும்

ஒருதன்மையளாகிய ஈண்டு நிறம் என்றது புறம்பை யுணர்த்திற்று.

பின்னமா யொன்றுகும் பெருமாயை யியற்றுவாய்
இன்னமா யங்தெளிய யெமக்கருளி யிமையவர்க்கும்
அன்னமாய் முன்ஞெருகால் அறம்பயந்த வறனுநீ;
குறியாதும் பிழையாத குலமறையை முதன்மயக்கி
வெறியாதி மலரோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த வறிவனீ;
மாறுத மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோறுத மதிவாங்கிக் கொடுத்தருளி யடியவர்க்குக்
காறுத மதிகாட்டுங் கருணைகூர் காட்சியைநீ,

(மூன்றுந்தாழிசை)

(இ-ள்) (1) வேறுபட்டு ஒன்றுகின்ற பெரியமாயையைச் செய்வாய்; இத்தகைய மாயத்தினின்றும் தெளிவடையும்படி எமக்கருள் செய்து, தேவர்களுக்கும் அன்னவடிவமாகி முன்ஞெரு முறை அரிய வேதத்தையுரைத்த அறவடிவினனும்நீயே; (2) குறித்த பொருள் சிறிதும் தவருத மேலான மறையை முதலில் ஒன்றுய்ச் சேர்த்துப் பின் மணம் பொருந்திய முன்னைய தாமரைப்பூவிலுள்ள பிரமனுக்கு வெளிப்படுத்தி வேறுபடுத்து ஒருவரும் அறியாத மறையை எமக்கும் அறியும்படி செய்த அறிவுடையோனும் நீயே ஆவாய்.

(3) பெருமையில்லாத அறிவைக் கொடுத்துத் தேவரை மயக்கியும் கிரகங்களுள் ஒன்றுகிய இராகு வென்ற பாம்பின் வாயினின்று சந்திரனை மீட்டுக் கொடுத்து அடியவர்களுக்குப் பிறர் அறியாத மயாவறுமதி நலத்தை யருளும் அருள்மிக்க தோற்றமுடையாய் நீ.

வானுநீ நிலனுநீ மதியுநீ விதியுநீ
தேனும்நீ யமுதுநீ திருவுநீ யருவுநீ

அன்புநீ யருளுநீ யாதிநீ யந்தநீ
இன்பநீ துன்பநீ யின்மைநீ யுண்மை நீ

(ஒருசீர்ச் சின்னம்)

(இ-ள்) ஆகாயமும், பூமியும், சந்திரனும், விதியும், தேனும், அமுதும், இலக்குமியும், அருவமும் (உருவமில்லாதவன்), அன்பும், அருளும், முதலும் முடிவும், இன்பமும், துன்பமும், இன்மையும், உண்மையும் நீயே யாவாய்.

எனவாங்கு (தனிச்சொல்)

நால்வகை யுருவிற் பல்வே றாகிய
கால முதல்வநிற் பரவுது ஞாலத்து
நல்லவை யல்லவை யெல்லாம் நினது
செல்வ நோக்கி னெய்திய வல்லிதிற்
றுயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யாம் எனவே" (சுரிதகம்)

சங்கருடண, பிரத்யும்ந, அநிருத்த, வாசுதேவர் என்று நால்வகையுருவத்தையுடைய பகுதிவேறாகிய காலத்திற்கும் முதல்வனே! உன்னை வணங்குவோம். உலகத்தில் நல்லவை, நல்லவையல்லாதவை யாவும் உன்னுடைய செல்வப் பார்வையின் அடையும் பொருட்டு விரைவாகத் துயரமும் பழவினையும் நீங்கி, நீங்காத சுற்றத்தைப் பெறுவோம்யாம் என்று ......பரவுதும் என்க.

(9) "அன்னமாய் முன்னம் அருமறை பயந்தான்" என்பது பெரிய திருமொழி. (14) "கோள் நாகம் மதிவாங்கிக் கொடுத்தருளி" என்றது பாம்பின்வாயினின்று சந்திரனை மீட்டுக் கொடுத்த கதையை "மதிகோள் விடுத்தாய்" (நான்முகன் திருவந்தாதி 12) "கோள்வாய் மதியம் நெடியான் விடுத்தாங்கு" எனப் பிறரும் (சீவகசிந். 454) (14, 15) பிறர்காணாத மயர்வறு மதி நலத்தை அடியார்க்கு அருளும் என்க. (21) நால்வகை உரு

சங்கருடண, பிரத்தியும்ந, அநிருத்த,வாசுதேவர் என்ற நான்கு வியூகங்களை (பரிபா 3, 80, 3). வல்லிதின்துயரமும் பழவினையும் நீங்கி எனஇயையும். எய்திய-எய்தும் பொருட்டு. வினையெச்சம். தொல்வினை-பண்புத்தொகை. பெயரா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

விளக்கத்தனார் பாட்டு

(அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா)

15 கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைகடரிற் கலந்தொளிரும் வாலுளை
யழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரோடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலிதடக்கையோய் (தரவு)

(இ-ள்) கெடுதல் இல்லாத அரிய சிறந்த முனிவர் சேர்ந்து மகிழ்ந்து வணங்கித்துதிக்க, கடலிற் பொருந்திய மிக்க வடவைக்கனல் போலப் பொருந்தி விளங்குகின்ற வெண்மையாகிய பிடரி மயிரையும் நெருப்பைப் பரப்புகின்ற சுழலும் சிவந்த கண்களையும் உடைய சிங்க வடிவமாய்த் தன்னோடு போர் செய்தவனாகிய இரணியனை மாலையும் முடியும் பிதிரவும், பொற்பொடி மிகவும், கொட்டுகின்ற நீர்போல் சிந்துகின்ற இரத்தம் அகன்ற இடத்தை உடனே நனைக்கவும் கூர்மையாகிய நகத்தால் மார்பைப் பிளந்த கொலைத்தொழின் மிக்க பெரிய கையையுடையவனே!

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியோடு முடியிறுப்புண்டு அயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்து புடைத்ததுநின் புகழாமோ

(இ-ள்) முரசு ஒலிக்கின்ற அகன்ற வடமதுரையிலுள்ளார் எல்லாரும் தலைநடுங்கவும், துவாரத்தையுடைய தோள் வளையை யணிந்த திரண்ட வலிமைபொருந்திய தோள்களை யுடைய, போர்செய்த வீரத்தையுடைய மல்லர்கள் அடியுமுடியு மழிக்கப்பட்டுச் சோர்ந்து அவ்விடத்தில் நிலத்தையடையவும் தூசியுண்டாகவும் கொடிய யுத்த களத்தில் அடித்துக் கொன்றது உனக்குரிய சிறந்த புகழாகுமா? (ஆகாது).

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்பு
மாணாதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கச்
சேணுயர் இருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ;

(இ-ள்) மிக்க ஒலியையுடைய அகன்ற உலக மக்கள் சேர்ந்து உடன் மிக நடுங்கவும் வலிய தன்மையையுடைய விளங்குகின்ற கடல்போல் பகையாய் எதிர்ந்த மயங்கிய தளர்ச்சியை உடைய பெருமை யில்லாதவராகிய பகைவரோடு அவர் வீரங் கெடவும், எதிரே அவர் கலங்கவும் மிகவுயர்ந்த சுவர்க்கத்திற் செல்லுமாறு அழித்து உன் கோபத்திற் செயலாகுமா? (ஆகாது).

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கருமுர ணெதிர்பலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்த்துதிறம் வேறாக
எருமலி பெருந் தொழுவி னிறுத்ததுநின் இகலாமோ?

(இ-ன்) ஒலிக்கின்ற மணியையுடைய பசுக் கூட்டங்கள் பரவி உடன் நீங்கியோட மிக்க வன்மையோடு எதிராகப் போர் செய்த கருமையாகிய ஒலியையுடைய அழகிய இடபம் முதுகும் கொம்பும் ஒடியும்படி கீழே விழச்செய்து, அதன் வன்மை அதனைவிட்டு நீங்கும்படி எரு நிறைந்த பெரிய தொழுவில்

அழித்ததுவும் உன் தகுதிக்குரிய போராகுமா? (ஆகாது).
(இவை மூன்றுந் தாழிசை)

இலங்கொளி மரகதம் எழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெங்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை (பேரெண்)

(இ-ள்) விளங்குகின்ற ஒளியையுடைய பச்சை இரத்தினமும் அழகு மிக்க கடலின் நிறமும் வலம்புரிச் சங்கத்தை ஏந்திய பெரிய கையையுடைய மாலே, உன்னிறமாகும். விரிந்த கொத்தாகிய கோங்கம்பூவும் வெந்தெரிந்த பசுமையாகிய பொன்னும் போர்செய்த யானையைக் கொன்றவனே! உன் ஆடையை ஒக்கும்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுடர் உறுபகை தவிர்த்த வாழியை
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடிவினை. (அளவெண்)

(இ-ள்) கண்ணைக் கவர்கின்ற ஒளி பொருந்திய திருமுடி விளங்கும் சிரசையுடையாய். குளிர்ந்த சந்திரனை, அதன் மிக்க பகையாகிய (பாம்பின் வாயினின்று) நீக்கிய சக்கரத்தையுடையாய்; ஒலிக்குந் தன்மையையுடைய கருடக் கொடியையுடையாய். வலிமைமிக்க சகடாசுரனை யழித்த திருவடியை யுடையாய்.

போரவுணர்க் கடந்தோய் நீ; புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ; நிழறிகழைம் படையோய் நீ
(இடையெண்)

போர் செய்த அசுரர்களை வென்றவனும்; சேர்ந்த மருத மரத்தை இரண்டாகப் பிளந்தவனும்; நீர் சூழ்ந்த அகன்ற

பூமியை அளந்தவனும்; ஒளி விளங்குகின்ற ஐம்படையையுடை வனும் நீயேயாவாய்.

ஊழிநீ; உலகுநீ; உருவுநீ; அருவுநீ;
ஆழிநீ; அருளுநீ; அறமுநீ; மறமுநீ; (சிற்றெண்)

(இ-ள்) ஊழிக் காலமும்; உலகமும்; உருவமுடையவனும்; உருவமில்லாதவனும்; கடலும்; அருளும்; அறமும்; மறமும் நீயே ஆவாய். எனவாங்கு (தனிச்சொல்) அசைநிலை.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
றொன்று முதிர் கடலுலக முழுதுடன்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே'' (சுரிதகம்)

(இ-ள்) எமது தலைவனாகிய அணியப்பட்ட வீரக் கழலையும் வளைந்த அணிகலங்களையும் பருத்த அழகையுடைய மார்பினையும் கயல் மீனோடு பொருந்திய புலிக் கொடியையும், மேகத்தை ஒத்த பெரிய கையையும் போர் செய்தற்குரிய வேலையும் உடைய அச்சுத நந்தி பழமையாய் முதிர்ந்த கடல் சூழ்ந்த உலக முழுமையும் ஒருங்கே பொருந்தி ஆணைச் சக்கரத்தைச் செலுத்துபவன் (ஆகுக) என்று பகைவரைக் கொல்லும் வன்மையுடைய ஒப்பற்றவனே! உன்னைத் துதிப்போம்.

(2) கடல்கெழுகணைசுடர் - வடவைக்கனல், அரிமாவாய் (3) மார்பிடந்த (6) எனவும், மலைந்தானை (3) மார்பிடந்த எனவும் இயையும் (7) மதுரை வடமதுரை (18) எருமலிபெருந் தொழு - தாதெரு மன்றம் (சிலப் - ஆய்ச்) தண்சுடர் உறுபகை தவிர்த்தது, மேற்பாட்டிற் குறித்த மதிகோள் விடுத்தகதையை. (35) அச்சுதன் என்பான் 972,974-ஆம் பாடலிற் கண்ட அச்

சுதாநந்தி அன்றி 1002, 1005-ஆம் பாடல்களிற்கண்ட அச்சுத களப்பாளன் என்ற அரசருள் ஒருவன் போலும்.

(இ-கு) சென்னியை, கொடியினை, வடிவினை—முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுக்கள். முதிர்கடல்-வினைத்தொகை ஒன்றுபு = செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

கலிப்பாவை

16 அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர்த் தோட்டவிழ்ந்து மலர்ந்தனையே
ஆர்கலி யுயரகத் தெழில்வானத் தமரர்கண முடனார்ப்ப
வார்புன லிகன்மிகல மறமல்லனை மாய்க்கலிற் பொங்கினை.
முள்ளெயிற் றரிமருள்க ணாய்த்தியரொடு நிரைநடுங்க
வரை திர ணிமிர்தடக் கையினனி மலையெடுத்தேந்தினை
காமரு தகைய கல்லியின் மார்பினை
கண்பொரு சுடரொளி நேமியை
பூமலி வினைபுனை தாரினை
பொன்புனை வினைபுனை யுடுக்கையை
அணையன
பலவுடன் புகழ்தகப் பயந்தோய்நின்
இணைபுணர் கழலடி பரவுதும்
துணைபுணர் உவகையொடு மன்னுது மெனவே.

(இ-ள்) அழகு விளங்குகின்ற சிறிய புள்ளிகளையுடைய விளங்கும் படத்தையுடைய பெரிய பாம்பின் பிடரியிலேறி அலையடங்கும் குளிர்ந்த பாற்கடலில் இதழ் விரிந்து உந்தித் தாமரை பூக்கப் பெற்றாய்! கடலின் மேல் உயர்ந்த இடத்து அழகையுடைய ஆகாயத்திலுள் தேவர் கூட்டங்கள் சேர்ந்து ஆரவாரிக்க மிக்க நீரில் மாறுபாடு மிகுதலையுடைய வீரத்தை மல்லனை இறக்கச் செய்தலிற் கோபங் கொண்டனை. முட் போன்ற பற்களையும் மானையொத்த கண்களையும் இடைச்சிகளோடு பசுக் கூட்டங்கள் நடுங்க, மலை போன்ற திரண்ட உயர்ந்த பெரிய

கையினால் மிக்க கோவர்த்தன மலையையெடுத்து ஏந்தினாய். அழகிய பெருமையையுடைய கல் போல் இயன்ற மார்பையுடையாய்; கண்ணிற் பொருந்துகின்ற மிக்க வொளியையுடைய சக்கரத்தையுடையாய்; பூக்கள் நிறைந்தொழிலால் அலங்கரிக்கப்பட்ட மாலையையுடையாய்; பொன்னால் அலங்கரிக்கப்பட்ட தொழிலையுடையதும் ஆகிய ஆடையையுடையாய்; அத்தகையனவாகியும் பல செயல்களுடன் புகழ் பெற்றாய். உன் இரண்டாகச் சேர்ந்த வீரக் கழலையணிந்த திருவடிகளைத் துதிப்போம். மனைவியோடு கூடிய மகிழ்ச்சியுடன் நிலை பெற்றிருப்போமாக என்று.

கண் பொரு-கண்ணோடு மோதுகின்ற, ஆவது கண்ணோடு பொருந்திய என்பது. வினைபுனை என்பதை புனைவினையென மாற்றி அலங்கரிக்கப்பட்ட தொழிலையுடைய எனவுங் கூறலாம். பொன்புனையென்றது பொற்சரிகை பொருந்தியுள்ளதை, வினை புனை யென்ற வேறு வேலைப்பாடுகளையும் குறிக்கும். உடுக்கை-உடுத்தல். தொழிலாகு பெயராய் ஆடைக்காயிற்று. இயன் மார்பு, புணர் கழல், புனை தார் வினைத்தொகைகள்.

(ஆசிரிய மண்டில விருத்தம்)

17 நிலங்கா ரணமாக நீர்க்கங்கை யேற்றான்
நீண்டதா ளாலங்கோர் நீர்க்கங்கை யேற்றான்
சலங்கா ரணமாக சங்குவாய் வைத்தான்
தாயலா ளவியநஞ் சங்குவாய் வைத்தான்
துலங்காச்சீர்த் தானவரைத் துன்னத்தா னட்டான்
துன்னுவார்க் கின்னமுதந் துன்னத்தா னட்டான்
இலங்கா புரத்தார்தங் கோமானை யட்டான்
ஏத்தாதார் நெஞ்சத்து ளெஞ்ஞான்று மெய்தான்.

(இ-ள்) திருமால் மண்காரணமாக மாவலிவார்த்த நீரைக் கையால் ஏந்தினன். (அவனளித்த பூமியை அளக்கும்பொருட்டு மேலே திருவடியைச் செலுத்தியகாலை, அது சத்தியலோகத்தை

யுடைய ஆங்குள்ள பிரமன் அத்திருவடிகளில் கங்கை நீரை வார்த்து நீராட்டிய பொழுது) நீண்ட காலினால் ஒப்பற்ற கங்கை நீரை ஏற்றான். பகை காரணமாகச் சங்கை வாய் வைத்து ஊதினான். தாயல்லாதவளாகிய பூதனை இறக்குமாறு அவள் முலையிற் பூசிவந்த நஞ்சை அவ்விடத்து வாய்வைத்துண் டான். சிறப்பு விளங்காத அசுரர்களை (தன்னை வந்து போர் செய்ய) நெருங்குதலால் கொன்றான். இனிய அமிர்தத்தைத் தன்னை அடைந்த தேவர் பெற ஆக்கித்தந்தான். இலங்கை நக ரில் உள்ளவர்க்குத் தலைவனாகிய இராவணனை அம்பெய்து கொன்றவன். தன்னைத்துதிக்காதவர் மனதில் எக்காலத்தும் அடையாதவன்.

முதலிரண்டடிகளில் நீர் கங்கை. நீர்க்கு அங்கையென 3, 4-ஆம் அடிகளில் சங்கு வாய்வைத்தான், நஞ்சு அங்கு வாய் வைத்தான் எனவும் 5, 6-ஆம் அடிகளில் தானவரைத்துன்ன தான் அட்டான், துன்னுவார்க்கு இன் அமிர்தம் துன்ன தான் எனவும் பிரித்துப்பொருள்கொள்க. 5ஆம் அடியில் தான வரை-மதநீர் பொழியும் மலையை ஒத்தகுவலயா பீடம்; அது தன்னைக் கொல்ல நெருங்கத்தான் அதனைக் கொன்றவன் எனவும் பொருள் கொள்ளலாம். 4வது அடியில் சீர்துலங்காத்தானவர் எனக் கூட்டுக. தாயலாள்-பூதனை. தாளால் கங்கை யேற்றது திரிவிக்கிரமாவதாரத்தில்; 'சதுமுகன் கையிற் சதுப்புயன் தாளிற் சங்கரன் சடையினிற்றங்கி யிழிபுனல்' என்ப (பெரி யாழ் திரு. 4, 7, 3). சலம்-பகை.

தேவபாணி

மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன்
மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவன்
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவன்
இனநிரைத் தொகைகளை யிசைத்தலின மைத்தனன்

முலையுணத் தருமவ ணலத்தினை முடித்தவன்
முடிகள் பத்துடை யவன் உரத்தினை யறுத்தவன்
உலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கினன்
ஒளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே.

(இ-ள்) தாமரை மலர்மேலுள்ள இலக்குமியை வடமார்பில் வைத்தவனும், மடங்கும் அலைகளையுடைய கடலைக் கடையும்பொருட்டு அடைத்தவனும், விளங்குகின்ற ஒளியையுடைய பெரிய கோவர்த்தன மலையைக் கையில் எடுத்தவனும் தொகுதியான பசுக்கூட்டங்களை குழல் ஊதுதலால் அழைத்தவனும், முலைப்பாலை உண்ணும்படி தந்தவளாகிய பூதனையின் வாழ்வை முடித்தவனும் பத்துத்தலைகளையுடைய இராவணனது மார்பை அறுத்தவனும் உலக முழுமையையும் ஒருகாலில் ஒடுக்கினவனும் ஆகிய திருமாலை ஒளி பொருந்திய திருவடிகளைத் தரும்பொருட்டு இனி அழைப்போம்.

19 (அரியைப் பாடவேண்டுமெனக் கூத்தர் பாடியது)
ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு
மவ்விடத்துன்
பேரே வருமென்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.

(இ-ள்) எவரேனும் ஒன்றைச் சொல்லத் தொடங்கினும் அவ்விடத்து உன் பேரே வரும்; என்ன பாக்கியத்தை யடைந்தேன். பெரிய நான்கு வேதங்களின் வேராகவுள்ளவனே! மிதிலை நகரத்திற் பிறந்த மின்னல் போன்ற சீதையுடனே கொடிய காலால் நடந்த மேகம் போன்றவனே! கடலைக் கொளுத்தும்படி வில்லை வளைத்த ககுத்த வம்சத்திற் பிறந்தவனே.

பேறு.முதனிலை திரிந்த தொழிற் பெயர். அது தொழிலாகு பெயராய்ப் பயனைக்குறித்தது. மின், கார், உவம ஆகுபெயர்கள் கூத்தர் முதன் முதற் சோழனைக் காணவந்த போது அவரது புலமையைச் சோதிக்க வேண்டி 'அரியைப் பாடுக' என்று கூற

தாம் அரசனைப் பார்த்த முதற்கண் திருமால் அவன் வாயி னின்று அங்ஙனம் வந்ததனையே வியந்து 'ஆரே எனும்' ஒன்று சொல்லத் தொடங்கினும் 'அவ்விடத்து உன்பேரே வரும்' என்று அவன் கொடுத்த விடயத்தையே திரும்பி அழகுபெறப் பாடி அரசவையினரை மகிழ்வித்தனர் புலவர் என்பர். எனும்- ஏதேனும். இதனைக் கம்பர் வாக்காக இக்காலத்தார் மாறிக் கருதுவர்.

கம்பர் பாட்டு

20 நாராய ணாய நமவென்று நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராளு மேனிக் கருணா கரமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே.

(இ-ள்) நாராயணாய நம வென்று சொல்லும் நல்லமன முடையோர் பூமியை யாளுகின்ற உன்னுடைய திருவடிகளை வணங்கித் துதிக்கும் விதத்தை அறியமாட்டேன். கருமை நிறம் பொருந்திய திருமேனியை யுடைய அருளுக்கிருப்பிடமாகிய திரு மேனி கொண்ட பெருமானுக்கு ஆராதனையாக யான் செய்வது என் அறியாமை ஒன்றுமே யாம்.

கருணாகரன்-இராம பிரானுக்கு ஒரு திருநாமம். "இலங் கையெறிந்த கருணாகரன்" என்றார் சமயங்கொண்டாரும், (கலிங்க) "கருணாலயத்தை வழிவேண்டிச் சரணமாகக் கிடந்த கருணாகரப் பெருமானையும்" (இராமானுசார்ய திவ்ய சரிதை பக் 64) எனப் பெரியாரும் "கருணையங் கடல் (இராமா வரு ணனை 5) கருணையார்கள்" (ஷ்டி குகப். 69) எனக் கம்பநாடரும் கூறுதல் காண்க:

திருமால் திருநாமப் பெருமை

21 வான்சொல்லுமே புவிசொல்லுமே மறை சொல்லுமே
நிறைசேடன்வாய்
தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே
சசிசொல்லுமே

தேன் சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே
திசையாமலே
நான் சொல்லவு வெளிவந்தவா நாராயணு நாராயணு.

(இ-ள்) மேல் உலகிலுள்ள தேவர்களும் பூமியிலுள்ள மனிதர்களும் கல்வி நிறைந்த ஆதி சேடன் வாயும், முனிவர்களுடைய பெரிய சபையிலுள்ளவர்களும், சந்திரனும் தேன் போலுஞ் சொல்லையுடைய உமாதேவியை இடது பாகத்திற் கொண்டவராகிய சிவபெருமானும் எட்டுத் திக்கிலுள்ளவர்களும் நாராயணு என்ற திருப்பெயரைக் கூறுவார்கள். இத்தகைய நாராயணுவென்னு நாமம், ஒன்றமறியாத நான் வருத்தமின்றிச் சொல்லும்படி எளிமையாக வந்தவிதம் என்ன ஆச்சரியம்

வான், புவி, சபை திசை-இடவாகுபெயர்கள்.

இது நாராயண சதகத்திலுள்ள அழகிய பாடல்களுள் ஒன்று.

பாரதம் பாடிய பெருந்தேவனார் பாட்டு

22 தேனோங்கு நீழற் றிருவேங் கடமென்னும்
வானோங்கு சோலை மலையென்றும்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

(இ-ள்) தேனையுடைய மர நிழலையுடைய திருவேங்கடமென்றும் ஆகாயத்தை யளாவிய (மரங்களையுடைய) சோலைமலையென்றும், மிகவுயர்ந்த தெற்கிலுள்ள திருவரங்கமென்றும், திருவத்தியூரென்றும் சொன்னவர்க்கும் துயரம் உண்டோ? (ஒரு நாளும் இல்லை).

திருவரங்கத்துத் திருமால்

23 நாவுண்டு நீயுண்டு நாமந் தெரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு

வண்டுறங்குஞ் சோலை மதிலரங்கத் தேயுலகை
யுண்டுறங்கு வாஞெருவன் உண்டு

(இ-ள்) மனமே! பூக்களில் உள்ள தேனையுண்டு வண்டுகள் உறங்குகின்ற சோலைகளையுடைய மதில் சூழ்ந்த திருவரங்கத்தில் உலக முழுமையும் உண்டு, அறிதுயில் கொள்ளுபவஞகிய திருமால் ஒருவன் உள்ளான். அவன் திருநாமங்களை ஓதித் தரித்துக்கொள்ள நாக்கு உளது. (அவனைத் துதிக்க) பாக்கள் உள்ளன. (ஆதலால்) உனக்குப் பயம் உண்டோ (இல்லை)

நாமம் ஓதித் தரிக்க என்க. 'ஈராறு நாம் உரை செய்து மண்கொட்டுடுவார்கள் காணுமிமையோர், என்றூர் வில்லிபுத்தூராரும்.

திருவரங்கத்துச் சத்தாவரணம்

24 மாடமாளிகை சூழ்திருவீதியும் மன்னர்சேர்திரு விக்ரமன் வீதியும்
ஆடன்மாரன் அகளங்கன் வீதியு ஆலிநாட னமர்ந்துறை வீதியும்
கூடல்வாழ்குல சேகரன் வீதியுங் குலவிராச மகேந்திரன் வீதியும்
தேடுதரும வருமாவின் வீதியுர் தென்னரங்கர் திருவாவரணமே.

(இ-ள்) மாடங்களையுடைய மாளிகைகள் சூழ்ந்த திருவீதியும், அரசர்கள் அடைந்துள்ள திருவிக்கிரமன் வீதியும், வென்றியையுடைய மன்மதன் போன்ற அகளங்கனுடையும், ஆலிநாடஞகிய திருமங்கையாழ்வார் பொருந்தி வசித்த வீதியும் மதுரையில் வாழ்ந்த குலசேகர பாண்டியன் வீதியும் மேலான இராசமகேந்திரன் வீதியும், யாவரும் தேடுகின்ற தருமவ தருமவர்வாவின் வீதியும் ஆகிய இவை தெற்கேயுள்ள திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள திருமாலின் வீதிகளாம்.

திருவேங்கடத்துத் திருமால்

25 கூனின்று போனவன் றனிமிர்ந் தோடக் குருடன் கொம்பிற்
றேனென்று காட்ட முடவன் குடங்கொண்டத் தேன்பிழியத்
தானின்ற வூமை தனக்கென்று கேட்கத் தருவர் வரம்
வானின்ற சோலை புடைசூழ் வடமலை மாயவரே.

(இ-ள்) ஆகாயத்தையளாவிய சோலைகள் பக்கங்களிற் சூழ்ந்த வடக்கேயுள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள திருமால் இன்று கூனோடு போனவன் நிமிர்ந்தோடவும், குருடன் கொம்பில் தேனுள்ளதென்று (அது இருக்குமிடத்தைக்) காட்டவும், நொண்டி, குடத்தைக் கொண்டு (கொம்பிலுள்ள) தேனைப் பிழியவும் நிலை பெற்ற ஊமை (அத்தேன் தனக்கு வேண்டுமென்று) கேட்கவும் வரந்தருவர்.

திருமுட்டத்துத் திருமால்

26 முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தேனே—தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.

(இ-ள்) ஸ்ரீமுஷ்ணம் என்ற திருப்பதியில் எழுந்தருளியுள்ள பன்றி (வராக) வடிவினனாகிய எம்பெருமானுடைய தாமரை போன்ற அழகிய திருவடிகளை நெருங்கி அடைய வலிமையில்லாமல் இருந்தேன் பக்கத்தில் கையில் சங்கைக் கொண்ட திருமாலே எனக்கு வந்த வருத்தத்தை நீக்க வருவாயாக.

முட்டம்-ஸ்ரீமுஷ்ணம். பன்றி-வராக ரூபியான திருமால் துப்பு-வலிமை

திருக்கண்ணமங்கைத் திருமால்

நீல மழைமுகிலோ நீலமணிக் குன்றமோ
கோல நிறைந்த குரைகடலோ—சோலையிளங்
காயா வனமோ கழுநீரோ கண்ணமங்கை
மாயா வுனதுவடி வம்.

(இ-ள்) திருக்கண்ணமங்கை யென்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஆச்சரிய குணங்களையுடையவனே! உன் திருவடிவம் நீல நிறத்தையுடைய நீர் கொண்ட மேகமோ? நீல இரத்தின மலையோ? அழகு நிறைந்த ஒலிக்குங் கடலோ? சோலையிலுள்ள இளங் காயாம்பூவின் மிகுதியோ? கழுநீர்ப் பூவோ? (என்னவென்றறியேன்).

சவரிப்பெருமாள்

28 முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின்போஞ் சவரிப் பெருமாளே—அன்பாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணமற்று.

(இ-ள்) முன்னே சென்ற திருமழிசையாழ்வாராகிய புலவருக்கும் பேரறிவாற் பாயைச் சுருட்டிக்கொண்டு பின்னே சென்ற சவரிப் பெருமாளே! அன்பு பொருந்தப் பூதனையென்ற பேயின் முலைப்பாலை யுண்டவனே! அறிவில்லாத இன்னமும் பிறந்து ஒருதாயின் முலைப்பாலை யுண்ணுதபடி முத்தியடையும் வரத்தைத் தந்தருளுவாயாக.

கச்சித்திருமால்

29 ஆடவர்க ளெவ்வா றகல்வரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றூர் கலிக்கச்சி மாண்பு.

(இ-ள்) திரிவிக்கிரம அவதாரத்தில் நீண்டு வளர்ந்த திருமால் திருவெஃகாவைக் கருப்பக்கிரமாகக் கொண்டு கிடந்தான் (படுத்திருந்தான்). திருப்பாடகத்தைக் கருப்பக்கிரகமாகக் கொண்டு இருந்தான் (உட்கார்ந்திருந்தான்). திருவூரகத்தைக் கருப்பக்கிரகமாகக்கொண்டு நின்றான். இதுவல்லவாமன்றுகள் நிறைந்த ஒலியையுடைய காஞ்சிபுரத்தின் பெருமையாகும். (ஆதலான்) ஆண் மக்கள் எவ்விதம் அந்நகரத்தைவிட்டு நீங்கிச் செல்வார்? (நீங்கிச் செல்லார் என்றபடி).

திருமழிசையாழ்வாரது அடியவரான கணிகண்ணர், தன்னைப் பாடும்படி வற்புறுத்திய கச்சிவேந்தனை நோக்கித் திருமலைச் சிறப்பித்துக் கூறிய பாட்டாகக் குருபரம்பரைகள் கூறும் வெஃகாவிற்கிடந்தான் பாடகத்திருந்தான் ஊரகத்து நின்றான் என எதிர் நிரனிறையாகக் கொள்க. இம்மூன்றும் கச்சியைச் சார்ந்த திருப்பதிகளாம் பஞ்சரம் திருவுண்ணாழிகைப் பகுதிக்குச் சிற்ப நூல் கூறும் பெயர் கோஷ்ட பஞ்சரம் கும்பபஞ்சரம் என்ப (திருவுண்ணாழிகை - கருப்பக்கிரகம். ''மாடக்கோயிலுண்ணாழிகையார்'' (தேவா) எனச்சிவபிரானைப் பெரியோர் வழங்குதலும் காண்க.

கச்சிவேந்தன் தன்னைப் பாடாது தெய்வத்தைப் பாடிய கணிகண்ணனைத் தன்னாட்டைவிட்டுப் போகுமாறு கூற, அவர் குருவாகிய திருமழிசையாழ்வாரிடம் கூற, அவர் நீ போகும் பொழுது யாமும் இங்கிரேம் பெருமாளும் இங்கிருக்கவேண்டுவதில்லை யென்று பெருமாளை நோக்கிக் ''கணிகண்ணன் போகிறான் காமரு பூங்கச்சி மணிவண்ணா நீகிடக்க வேண்டா'' மென்று பாடப் பெருமாளும் தன்பாம்புப் பாயைச் சுருட்டிக் கொண்டு திருமழிசையாழ்வாரின் பின்னே சென்றுவிட்டார் என்பதே முன்பாட்டிற் குறித்த வரலாறாகும்.

அத்திகிரி

30 அன்றயனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்தி கிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கணிற மேவுவது மத்தி கிரியே
வென்றவண் வணக்குவது மேலில கெயிற்றரிய
தானவரையே
தன்றொழின் முருக்குவது தானில கெயிற்றரிய
தானவரையே.

(இ-ள்) அக்காலத்துப் பிரமனை உந்தித்தாமரையினின்று படைத்த திருமால் எழுந்தருளி யிருப்பதும் அத்திகிரியே. கசேந்திரன் என்ற யானையைப் பற்றிக்கொண்ட முதலையி யிடத்துச் சென்று அது சாகும்படியிருப்பதும் அத்தி (அத்திருமால் கையிலுள்ள) அச்சக்கரமேயாகும். திருமாலாகிய கண்ணபிரான் வென்று அக்கஞ்சன் அரண்மனையில் வணங்கச் செய்வதும் மேலாக விளங்குகின்ற தந்தத்தையுடைய அரிய மதநீர் பொழியும் மலைபோன்ற குவலயாபீடமென்னும் யானையேயாம். தன்றொழிலால் அழிப்பதும் விளங்குகின்ற வக்கிர தந்தத்தை (பற்களை) யுடைய அரக்கரையேயாம்.

அத்தகிரி - கச்சியில் தேவப் பெருமாள் திருக்கோயில் கொண்ட தலம். முதலைக்கண் (அஃது) இற (சாக) மேவுவது அத்திகிரி (-சக்கரம்) என்க. தான வரை - மதநீர் பொழியு மலை போன்ற குவலயாபீடம். தன் தொழிலால் அழிப்பதும் தான வரை (-அரக்கரை) என்க. எயிறு முன்னது யானைத் தந்தம்; பின்னது வக்கிர தந்தம்.

திருமோகூர்த் திருமால்

31 பொன்னனைவா ளரக்கனை நூற்றுவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காயை வருக்காய்க் காத
னப்பினைக்காய்ச் சானகிக்காய் நடவைக்காக

மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
முன்னுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூரானே.

(இ-ள்) இரணியனையும், வாளையுடைய இராவணனையும், துரியோதனுதியர் நூற்றுவரையும், பாரிசாத தருவையும், போருக்குரிய வில்லையும், ஒலிக்கின்ற கடலையும் முறையே, இரணியன்பெற்ற மகனுகிய பிரகலாதனுக்காகவும், தேவர்க்காகவும், பஞ்சபாண்டவர்க்காகவும், அன்புள்ள நப்பின்னைக்காகவும், சானகிக்காகவும், நடந்து செல்லுகைக்காகவும் முறையே நிலைபெற்ற நகத்தாலும், கூர்மையாகிய அம்பினுலும், சங்காலும், கருடப் பறவையாலும், விளங்குதோள் வலியாலும், குரங்குகளாலும், முறையே நினைக்கப்படுகின்ற உடலைக் கிழித்தும், தலையைக் கொண்டும், போரில் விழச் செய்தும், வேரோடுங் கொண்டும், ஒடித்தும், அடைத்தும் (அருஞ்செயல்புரிந்த) திருமோகூரில் திருக்கோயில் கொண்டருளும் திருமாலே.

பொன்னனைப் பொன்னன் ஈன்ற நன்மகற்காய் முன்னுடல் கீறியென்னும் வாளரக்கனைச் சுரற்காய் வடிக்கணையால் சிரங்கொண்டெனவும் நூற்றுவரை ஐவருக்காய் அமரில் வீழ்த்தி எனவும், காவை காதல் நப்பின்னைக்காய்ப்புள்ளால் முதலொடுங் கொண்டெனவும், பொருசிலையைச்சானகிக்காய் இறுத்தெனவும், கனைகடலை நடவைக்காக வானரங்களால் அடைத்த எனவுங் கூட்டி மேற்கூறியவாறு பொருளுணர்க.

பொன்னன்-இரணியன். கா-பாரிசாததரு. அத்தரு சத்தியபாமைப் பொருட்டுக் கருடன்மேல் ஏற்றிக் கண்ணபிரானுல் மண்ணுலகிற் கொணரப் பெற்றது என்பது வரலாறு. அப்பாமையே நப்பின்னை யென்பது இது பாடினேர் கருத்துப் போலும். நடவை-நடந்து செல்லுகை.

சீவில்லிபுத்தூர்க் கோபுரம்

32 இருக்கோது மந்தணர் சூழ்புது வாபுரி யெங்கள் பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங்கோதை மணிவண்ணனூர்
திருக்கோ புரத்துக் கிணையம்பொன் மேருச் சிகரமென்றே
பருக்கோத லாமன்றி வேறுவ மானப் பணிப்பில்லையே.

(இ-ள்) மறையோதும் அந்தணர் சூழ்ந்த சீவில்லிபுத்தூரில் கோயில் கொண்டுள்ள எங்கள் தலைவனாகிய மணம் பொருந்திய கோதையார் வாழ்கின்ற வடபெருங் கோயிலில் எழுந்தருளியுள்ள நீலமணிபோலும் நிறத்தையுடையவராகிய திருமாலினது திருக்கோபுரத்துக் கொப்பு அழகிய பொன்மயமாகிய மகாமேரு மலையின் சிகரமென்றே ஒப்புச் சொல்லலாமல் லாமல் வேறுவமானமாகச் சொல்லத்தக்க தொன்றுமில்லை.

வருக்கு-வருக்கம், இனம், ஒப்பு.

குறுங்குடித் திருமாலைக்கூத்தர் பாடியது

33 திக்குளெட் டுக்கயம் துக்கமுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரம் தைக்கவிட் டேற்கிட மாமதுர
இக்குமுற் றிக்கணுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே.

(இ-ள்) எட்டுத்திக்கிலுமுள்ள எட்டு யானைகளும் துக்கமடைந்து பயந்து அலறும்படி கரிய கடலின்கண் அம்பு தைக்குமாறு செலுத்திய திருமாலுக்கு இடமாவது சிறந்த இனிமையையுடைய கரும்பு முற்றிக் கணுக்கள் சற்றுப் பிளந்து தெறித்த முத்தைக், கொக்குகள் நிரம்ப உட்கொண்டு சிலவற்றைக்கக்கி மீதமுள்ளன சில விக்குகின்ற சோலைகளையுடைய திருக்குறுங்குடியே யாகும்.

முத்துக்கள் இருபது இடங்களிற் பிறக்குமாதலால் அவற்றுள் ஒன்றாகிய கரும்பின்கண் பிறக்குமுத்து ஈண்டுக் கூறப்பட்டது.

ஷை புகழேந்தி பாடியது

34 எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணித் தற்பரித் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலம் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

(இ-ள்) (ஓம்நமோ நாராயணாய) என்ற எட்டெழுத்துக்களை மனதிற்குறித்துக்கொண்டு தினந்தோறும் துதிக்கும் உயர்ந்தோர்கட்கு அழகிய முத்திப் பதவியைச் சிறப்பாகக் கொடுக்கின்ற அந்த வட்டமாகிய நீண்ட அரவாகிய அணையை யுடைய திருமாலுக்கு இடம் தாமரைக் கொட்டைக் கூட்டங்கள் தத்திமுத்தைப் பெறுந் திருக்குருங்குடியே யாகும்.

வாரிசப் பொகுட்டு-தாமரைக் கொட்டை. பணித்தற்பம்-அரவாகிய அணை.

திருமால்பதி

35 ஆழ முடைமையினா லாழியா மந்தரத்து
வாழ நிமிர்தலான் மந்திரமாம்—ஏழுலகுந்
தந்தளிக்கும் வண்ணத்தாற் றாயாஞ்செந் தாமரைக்கட்
பைந்தெரியல் மாயோன் பதி.

(இ-ள்) செந்தாமரை போன்ற கண்களையுடை திருமால் பதி ஆழமுடைமையினால் ஆழியென்று கூறப்பட்ட பாற்கடலாம். ஆகாயத்திற் சென்று உயர்தலான் மந்தரமாகும். ஏழுலகங்களையும் படைத்துக் காத்தலால் தாயாம்.

மாயோன் பரிசு எனத் திருத்தித் திருமால் இயல்பு கூறிய வாறாகக் கருத்துக் கொள்க.

சிவபிரான்

36 மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையான் ஆதிரையா னென்றென் றயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

(இ-ள்) நிலைபெற்ற விண்மீன்களையும் (நட்சத்திரம்) திங்களையும், நெருப்பையும் முன்னாற் படைத்த முதற்கடவுளாகிய சிவபெருமானைப் பரவிய அலையையுடைய நீரையுடைய கடலை எல்லையாகவுடைய உலக மக்கள் மேலும் ஆதிரையான் ஆதிரையான் என்று பலகாற் சொல்லிச் சோர்வடைவர்.

ஆதிரை-சிவபெருமானுக்குரிய திருநாள். ''தாளாலரக்கன்றோள் சாய்த்த தலைமகன்றன், நாளாதிரை யென்றே'' (தேவா திருவாமாத் 8, சம்) ,'ஆதிரைநாயகன்'' (ஷை பொது ஆதி புராணத்திருக்குறுந, 1) ஆதிரை முதலவன்(பரிபா 8, 6).

37 நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரா னொருவனியமானனுமாய்
எண்ணிறந்த வெப்பொரு மாம்.

(இ-ள்) மலர்ந்த கொன்றைப் பூக்களா லாகிய ஒளி நல்ல மாலையையுடையவனாகியசிவபெருமான்நிலம் ஆவான்.ஆகாயமாவான். மிக்க காற்றும் நீரும் தீயுமாவான். விரிந்த கிரணங்களையுடைய பரிதியாவான். வானில் உள்ள திங்கள் ஆவான். அல்லாமல் ஆன்மாவுமாய் அளவில்லாத எல்லாப் பொருள்களுமாவான்.

இயமானன்-ஆன்மா(பிதண்டி 14, தி-தண்டி 73)

38 கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்றும் சடையர்—பொறிவிரவு
நாகத்தர் சூலத்தர் நன்னுதலா ளானிருந்த
பாகத்த ரென்றே பரசு.

(இ-ள்) விடந் தங்கிய கழுத்தையுடையவர், கையின்கண் மண்டை யோட்டை யுடையர். வெண்மையாகிய பிறைச் சந்திரனை யணிந்த முடியையுடையவர். பின்பக்கம் தாழ்ந்த சடையையுடையவர். புள்ளிகள் பொருந்திய பாம்பையுடையவர். சூலாயுதத்தை யுடையவர். நல்ல நெற்றியை உடையவளாகிய உமையிருந்த பாகத்தையுடை யவர் என்று சொல்லி (சிவபெருமானைத்) துதிப்பாயாக.

39 தலையினமர் கங்கைத் துகிலுடையான் றன்கைச்
சிலையினமர் செங்கண்மால் பாகன்—நிலையினமர்
தானவரைக் கொன்று விழக்கெடுத் தான்றனியே
வானவரெல் லாமதிக்க வந்து.

(இ-ள்) தலைக்கண் பொருந்திய கங்கையாகிய தலை ஆடையை உடையவனும் மேருவாகிய தன் கை வில்லில் அம்பாக அமர்ந்த சிவந்த கண்களையுடைய திருமாலை ஒரு பாகத்திற்கொண்டவனும் ஆகிய சிவபிரான் நிலையாகப் பொருந்திய அசுரர்களைக் கொன்று தான் தனியாகத் தேவரெல்லாம் மதிக்கும்படி வந்து அவர்கள் துக்கத்தை நீக்கினன்.

கங்கையாகிய தலையாடை யுடையவன். மேருவாகிய தன் கை வில்லில் அம்பாக அமர்ந்த திருமால் என்க. இழவு கெடுத்தான் என்று பாடம். இழவு - துக்கம்.

40 மாத ருமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையி னொலியாலோ—யாதாலோ
கோல மிருதிறனுக் கொண்டான் றிருமிடற்றின்
ஆல மமிர்தான வாறு.

(இ-ள்) தன் வடிவத்தை ஆண் பெண் ஆகிய இரு உருவமாகக் கொண்டவனாகிய சிவபெருமானுடைய அழகிய கழுத்திற் பொருந்திய விடம் அமிர்தம் ஆனவிதம் அழகிய உமாதேவியின் மழலையாகிய வாய்மொழியாலோ, சொல்லப்படுகின்ற வேதத்தின் ஒலியாலோ எதாலோ (அறியேன்).

சிவபிரானது மிடற்றில் ஆலம் அமிர்தாகியது, மொழியாலோ, ஒலியாலோ என்க. மாதர் - அழகு. இருதிறன் - ஆண் பெண் உருவம். உரு, அரு எனினும் ஆம்; [பிதண்டி 63—தி. தண்டி 62].

41 கொடியார் கொடியார் மதின்மூன் றுங் கொன்ற
படியார் பணைத்தடக்கை நால்வாய்க்—கடியார்
உரியா ருரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம்.

(இ-ள்) கொடியவர்களாகிய (தாருகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்ற) அசுரர்களது கொடி கட்டிய மதில் மூன்றையும் அழித்த தன்மையை யுடையவர். பனை போலும் பெரிய கையையும், தொங்கும் வாயையுமுடைய அச்சம் பொருந்திய யானைத் தோலையுடையவர். எம்மை ஆள உரிமையுடையவர். சொல்லுதற்கு அரியவர் கழுத்தில் கருமை நிறத்தை யுடையவர்.

கொடியவரது கொடி பொருந்திய மதில். படி-தன்மை, கடிஆர்உரி-அச்சம் தங்கிய யானைத் தோல். களம் கரியார் என்க.

42 கரவோடு நின்றார் கடிமனையிற் கேயேற்
இரவோடு நிற்பித்த தெய்வம்-யரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.

(இ-ள்) பாம்போடு பருத்த ஆமையை யணிந்த முதல்வனாகிய சிவபெருமானை முன்வணங்க முடியாமையை மேற்கொண்ட மனம் வஞ்சனையோடு இருப்பவருடைய காவலையுடைய மனையில் கையில் (பிச்சை) ஏற்று இரந்து நிற்கும்படி செய்தது.

கடி-காவல். இரவோடு நிற்பித்தது-இரந்து நிற்கும்படி செய்தது. "நூன்மேலோர் ஆமைபூண்டார்' (தேவா-பந்தணைநல் 1 அப்) என்பதனால் ஆமை சிவபிரான் அணிகளுள் ஒன்றாதல் அறிக.

தரவு கொச்சகம்

43 நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளைத்ததுபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமுலையோர் குறிசெய்ய
வேறணிந்த சுடரெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
ஏறணிந்த வெல்கொடியோ யெவ்வுயிர்நிற் றவிர்ந்தனவே.

(இ-ள்) திருநீறணிந்த திருமேனியில் (அழகிய உடம்பில்) நெருப்பு வடிவம் மேலெழுந்ததுபோல் ஒரு பாகத்தை யலங்கரித்த குங்குமச்சேற்றைக் கொண்டு ஒப்பற்ற முலை அழகாகக் குறித்தலைச் செய்யவும், வேறாக அணிந்த (அணிகள்) ஒளியை வீசவும், மன்மதன் பொருட்டு நெருப்புக்கண்ணால் விழித்தலைச் செய்த இடபத்தால் அலங்கரிக்கப்பட்ட வெல்லும் கொடியையுடையோய்! எந்தவுயிர்கள் உன்னைவிட்டு நீங்கின? (ஒன்றும் நீங்கவில்லை)

தரவிணைக் கொச்சகம்

44 பூணாக வெண்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலாள் பாகங்கொண்
டூணாரும் பிச்சையான் உண்ணாத நஞ்சுண்டான்

வாறூறு தோய்ந்த சடையான் மழுவலத்தான்
யாஞர்வஞ் செய்யு மிறை.

(இ-ள்) யான் விருப்பஞ் செய்யுங் கடவுள் எலும்பு அணி கலஞகும்படி அணிந்தான்; பூதப்படையையுடையவன்; வேதத்தையுடையவன்; திங்கிழைக்கும் பாம்பாகிய கச்சையுடையவன்; கொம்பை யேந்திய கொல்லும்இடபத்தையுடையவன்;பெருமை பொருந்திய மார்பில் வெண்மையாகிய பூணூலையுடையவன்; ஒளிபொருந்திய நெற்றியையுடைய உமாதேவியை இடப்பாகத் திற்கொண்டு உணவாகப் பொருந்திய பிச்சையையுடையவன்; ஒருவரும் உண்ணுதவிடத்தையுடையவன்; ஆகாயகங்கை பொருந்திய சடையையுடையவன். மழுவை வலக்கையில் உடையவன்.

எனவாங்குப்
பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் பயந்த
புனைபூங் கழற்கான்மேற் பூவோடு நீர்தூஉய்
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
எனைநாளு மேத்துது மெந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு.

(இ-ள்) என்று அவ்வாருகப் பாடி வணங்குவோர்க் கெல்லாம் வினைக்குற்றம் நீங்கும் விளக்காகும் தோற்றத்தையுடையவனே; இயமனுக்கும் அச்சங் கொடுத்த அலங்கரிக்கப்பட்ட அழகிய வீரக்கழலையுடைய காலின் மேல் பூவையும் நீரையும் அருச்சித்து, தேவியால் மாட்சிமைப்பட்ட இடப் பாகம் உள்ளடங்க வாழ்த்தி எல்லா நாட்களும் துதிப்போம். என் தந்தையே என் மனம் உன்னை நினையாமல் நீங்காததாகுக.

(1) என்பு பூணுகும்படி. (2) கோள்நாகம்-திங்கிழைக்கும் பாம்பு (3) மாண் ஆகத்தில் (-மார்பில்) (6) ஆர்வம்-

பத்தி (11) மணிமாண்ட பாகம்-தேவியால் மாட்சிமைப்பட்ட இடப் பாகம்.

(கொச்சக வகை)

45 கடாமுங் குருதியுங் கால் வீழ்த்த பச்சைப்
படாமும் புலித்தோலுஞ் சாந்தும் பரமன்
இடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் கங்கை
விடாமுண்ட வார்சடையின் வெண்ணீ றணிந்தான்
மெய்யுறு நோயில்லை வேறோர் பிறப்பில்லை
ஐயுறு நெஞ்சில்லை யாகாத தொன்றில்லை.

(இ-ள்) மதநீரையும் இரத்தத்தையும் தன்னிடத்தினின்றும் விழச்செய்த (யானையின்) பசிய தோலாகிய போர்வையையும் புலித்தோலையும், சந்தனத்தையும் அணிந்த மேலானவன். இடமகன்ற நெற்றியையுடையவன். எக்காலத்தும் கங்கை நீங்காத திரண்ட நீண்ட சடையையுடையவன்; அவனுடைய வெண்மையாகிய திருநீற்றை அணிந்தால் உடம்பிற்கு வரும் நோயில்லையாம். மற்றோர் பிறப்பு இல்லையாம். சந்தேகப்படும் மனமில்லையாம். அவனுக்கு முடியாத செயல் ஒன்றுமில்லையாம்.

கால் வீழ்த்த-தன்னிடத்தினின்றும் விழச்செய்தது; இல்லையாம்படி போக்கின வெனினும் ஆம்: பச்சைப்படாம் பசிய தோலாகிய போர்வை. மேற்போர்வைக்குப் பச்சைவடம் என்ற வழக்குண்மையும் (ஈடு 4, 8, 2,) அறியத்தக்கது. இடாமுண்ட-இடமகன்ற; விகாரம். முண்டம்-திரட்சி சடையானது வெண்ணீற்றை அணிந்தாலென்க.

(பெருந்தேவ பாணி வகை)

46 பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப்
புலியுரிமேற் பைத்தலைதாழ் பூங்கச்சை விரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்
தண்கமழ்பூந் தாரிதழி தலைமலிந்து பிறைதயங்க

மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் றேலாதே
விழிவலத்தான் உருவழிந்தோன் வேடங்கண்
டுணர்வழியாக்
கலிகெழு கடற்கச்சிக் கமழிளந் தேமாவின்
ஒலிதளிரு முலைச்சுவடு முடன் சிறப்பவுலவுங்கால்
(எட்டடித்தரவு)

(இ-ள்) பிச்சையெடுக்கும் உருவிற்குத்தகாத படைகளாகிய மழுவையும் வாளையும் வலப்பக்கத்தில் ஏந்திப் புலித்தோலின்மேல் படமுள்ள தலையையுடைய பாம்பாகிய தாழ்ந்த அழகியகச்சை விரித்துப்பொருத்தி, கண்ணைக் கவருந்திருமேனியுடன் வெண்மையாகிய பூணூலின் அழகு பகைகொள்ளவும், குளிர்ந்த மணக்கின்ற மாலையிலுள்ள கொன்றையுடன் பிறைச்சந்திரன் தலையின்கண் மிகுந்து விளங்கவும் வெற்றியுடைய சொல்லால் மயங்காமலும் புன்சிரிப்பாற்றேலாமலும் வெற்றியையுடைய நெற்றிக்கண்ணால் உருவம் அழிந்தவனாகிய மனமதன் வேடத்தைப் பார்த்து உணர்வழியவும், ஒலிபொருந்திய கடல் வளமுழுதுமுடைய காஞ்சியில் மணக்கின்ற இளந்தேமாமரத்தின் தழைத்தலையுடைய தளிரும் தேவியின் தனக்குறியும் சேர்ந்து சிறந்து விளங்கவும் உலவும் பொழுது.

நீறேறுந் திருமேனி நெடும்பகலே நிலவெறிக்க
ஏறேறிக் கடைதோறும் இடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுதும் இடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ.

(இ-ள்) திருநீறுபொருந்திய திருமேனி நீண்ட பகற்பொழுதிலேயே நிலாவை வீசும்படிக் காளை மாட்டின் மேலேறி வாயிலிடந்தோறும் கொடுக்கின்ற பிச்சையை யேற்றுக்கொள்ளும் பொருட்டு வருகின்றீர். காளை மாட்டில் ஏறிக்கொடுக்கும் பிச்சையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு வரும் பொழுதும் தம் இடத்தைவிட்டுப் பிரியாத ஒரு பாகமாகப் பொருந்திய (உமா

தேவியின்) பசுமையாகிய பாகத்தைக் கொள்வானோ கொள்ள மாட்டானோ?

பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடலும் கொள்ளுமோ கொள்ளாதோ.

(இ-ள்) பற் பொருந்திய உண்கலத்தில் பிச்சையேற்றலை மேற்கொண்டு சூதாடுகருவியை ஒத்த தனங்களையுடைய மகளிரது மனங்கட்குப் பொருந்த நீர் வரும் பொழுது கொல்லுந் தன்மையையுடைய இடபத்திற்கு அறுகம்புல்லையிடுதலும் அது அப்புல்லை ஏற்றுக்கொள்ளுமோ? கொள்ளாதோ?

நாணுக மடைந்தையர்பால் பலிக்கென்று நடந்தக்காற்
பூணுகந் தமீஇக்கொளினும் பொங்காது போலுமால்
பூணுகந் தமீஇக்கொளினும் புகையுயிர்த்துப் பொங்காத
கோணுகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ?.

(இ-ள்) நாணம் உண்டாகும்படி பெண்களிடத்துப் பிச்சைக்கென்று நடந்தபொழுது அணிகலமாகப் பாம்புகளை அணிந்துகொண்டாலும் அவை கோபித்துச் சீறுதுபோலும். அணிகலமாகப் பாம்பை அணிந்துகொண்டாலும் புகைபோல் மூச்சுவிட்டுச் சீறுத வலிய பாம்பு நாங்கள் தரும்பாலைக் குடிக்குமோ? குடிக்காதோ?

(நான்கடித் தாழிசை மூன்று)

எரிகல னிமைக்கும் இடவயிற் றெருடிக்கை
பரிகல னேந்தும் பரிசிறந் ததுகொல்;
உமையவள் விலக்கவும் ஒலிகட னஞ்சம்
இமையவர் தம்மை யிரந்துண் டதுகொல்.

(ஈரடி இரண்டு)

(இ-ள்) நெருப்புப் போன்ற அணிகலன்கள் விளங்கும் இடப்பக்கத்து வளையலை யணிந்த கை பிச்சைப் பாத்திரத்தை யேந்துமளவு நிலைகடந்தது போலும். உமாதேவி விலக்கவும் ஒலிக்கின்ற கடலிலுண்டாகிய விடத்தைத் தேவர்கள் தம்மை யிரக்க அதனால் உண்டான் போலும்.

இடையேழு பொழில்கட்கும் இமைப்பளவிற் செல்லேறே
கடைதோறு மதுநிற்பக் கற்பித்தவா றெவன்கொல்;
இரப்புநீர் வேட்டதுகேட் டிமையவரென் பட்டனரே;
பரப்புநீர்க் கங்கையே படர்சடையிற் கரந்ததே
(ஓரடிநான்கு)

(இ-ள்) ஏழு உலகங்கட்கும் இடையே இமைக்குமளவிற்குள் செல்லும் இடபத்தை வாயில்தோறும் அது நிற்கும்படி கற்கச் செய்த விதம் எவ்விதம்? யாசித்தலை நீர் விரும்பியதைக் கேட்டுத் தேவர்கள் என்ன பாடுபட்டனரோ? பரந்த நீரையுடைய கங்கையே படர்ந்த சடையினிடத்தில் மறைந்து கொண்டதே.

பூண்டன வென்பு; புனைவது தும்பை;
ஆண்டன பூதம்; அறைவது வேதம்;
இசைப்பன பல்பேய்; எழீஇயது வீணை;
அசைப்பன வேணி; அதிர்வன பொற்கழல். (இருசீரெட்டு)

(இ-ள்) அணிந்தவை எலும்புகள், அலங்கரிப்பது தும்பை, ஆளப்பட்டவை பூதங்கள், சொல்லுவது வேதம் (உன்புகழை) சொல்லுவன பல பேய்களாம், இசை எழுப்பப் பெற்றது வீணையாம். அசைக்கப்படுபவை சடைகளாம், ஒலிப்பன பொன்னாலாகிய வீரக்கழல்களாம்.

எனவாங்கு - தனிச்சொல் - அசைநிலை

எல்வளை மகளிர் இடுபழி நசைஇப்
பல்கடை திரிதரூஉஞ் செல்வநிற் பரவுதும்

கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்த்த வன்ருள் வளவன்
இமிழிசை வேங்கடம் போலத் தமிழ்த்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல் போற்றி வாழிய நெடிதே. (சுரிதகம்)

(இ-ள்) ஒளி பொருந்திய வளையலை யணிந்த (தாருகாவனத்து ரிசி பத்தினிகளாகிய) மகளிர் சொல்லும் பழியை விரும்பிப் பல வாயில்களிலும் திரிகின்ற செல்வ! உன்னைத் துதிப்போம். கொடியிற் எழுதப்பட்ட பன்றி மண்ணிற் புழுதிபடிந்து கிடக்க வடக்குத் திசையில் (வெற்றிக்கடையாளமாக) வாகை மாலையைச் சூடித் தெற்குத் திசையிலும் வென்றி வாய்க்கப் பெற்ற வலிய முயற்சியை யுடைய, இராசகேசரி வர்மன் இராசாதிராசன் ஒலிக்கின்ற திருவேங்கட மலையைப்போல நாவலோடு கூடிய பெயரையுடைய பூமியைக் காவல் செய்து நீண்ட காலம் வாழ்வானாக.

(2) பைத்தலை-படமுள்ள தலையையுடைய பாம்பு. 4 இதழி-கொன்றை. இதழியுடன் பிறை தலைமலிந்து தயங்க என்க. (6) (பி உணர்வழியாதி-உணர்வழிய) (7) கடற்கச்சி-கடல் வளமுழுதுமுடைய காஞ்சி. "கச்சி கடல் படுவவெல்லாம்படும்" என்ப (பெருந் 2128)கடல்போல் ஒலி மிக்ககச்சி எனினும்ஆம். (8) ஒலிதல் - தழைத்தல் "வாரொலிகூந்தல்(சிலப். பதிகம் 50) எனக் காண்க. முலைச்சுவடு-நீர்ப்பெருக்குக் கஞ்சித்தன்னைத் தழுவிய தேவியின் தனக்குறி. உருவழிந்தோன் உணர்வழியவும் உடன் சிறப்பவும் உலவுங்கால் என்க. (10) கடைதோறும்-வாயிலிடந்தோறும் (22) தொடிக்கை பரிகலமேந்துமளவு நிலைகடந்தது போலும். பொழில்-உலகம். (26)அது-அவ்வேறு. (31) எழீஇயது-இசையெழுப்பப் பெற்றது. (34) மகளிர்-தாருகாவனத்து இருடிபத்தினியர்; அவர் இட்டுரைக்கும் நிந்தனை

கலைவிரும்பி (3)) கொடியில் எழுதப்பட்ட பன்றி மண்ணிற் புழுதி படிந்து கிடக்க எனறது தம்வராகத்துவசம் மண்ணிடை வீழ்ந்து புழுதியாடும்படி சளுக்கர் தோற்க எ-று. சளுக்கர்க்கும் சோழர்சகும் 10, 1 ஆம் நூற்றுண்டுகளில்நடந்தபோர்களுள்ளே இஃது இன்னதைக் குறிப்பதென்று துணிய இடமில்லையேனும் 'வட திசை வாகைசூடித் தென்றிசை வென்றி வாய்த்த ...... வளவன்' என்றதனுல் சளுக்கனுகிய ஆகவமல்லன் முதலிய வரை வடபால் இருமுறை வென்று அவர் தலைநகரைப் பிடித் தும் தென்னுடு முழுதும் தன்னடிப்படுத்தும் போந்த சோழன் —இராசகேசரிவர்மன் இராசாதிராசன் (கி பி. 1018—1052) என்று கருதற்குப் பொருத்தம் உண்டு. (ஷை சோழன் மெய்க் கீர்த்தி காண்க—இந்நூல் பாட்டு 783) வேங்கடம் (39) போல வாழிய (41) என இயையும். (40) நாவலந் தீவினதாகிய தமிழ் நாடு என்க.

சிறு தேவ பாணி

47 வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேண் மிகவெய்யக்
கண்ணளவோர் புலனல்லாக் கனல்விழியா லெரித்தனையால்
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே.

(இ-ள்) அழகிய மலர்களாகிய அம்பைக் கோத்து மன் மதன் மிகவெய்ய கண்ணின் அளவாக ஓர் புலனுக அல்லாத தீக்கண்ணினுல் எரித்தாய். அளவில்லாத தேவர்களும் இருடி களும் எழுந்து ஓடுதலைச் செய்ய ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளாகிய உமாதேவியை இடப்பாகத்திற் கொண்டு தன் னந்தனியாக இருந்தாய்.

கொச்சகவகை

48 பிறையணிந்த சடைமுடியோன் பிஞ்ஞகன் பெம்மான்
கறையணிந்த கண்டத்தான் கையிலங்கு சூலத்
திறை யணிந்த நெஞ்சினேர்க் கின்றும் பிறவி
இம்மைப் பிணியும் இயலும் பசியொடு
தம்மைத் துறந்திடும் தாவில் புகழுளதாம்.

(இ-ள்) பிறைச்சந்திரனை யணிந்த சடைமுடியையுடையவனும், பிஞ்ஞகனும், பெம்மானும், விடத்தையணிந்த கழுத்தையுடையவனும் ஆகிய சிவபெருமானுடைய கையில் விளங்கும் சூலத்தைச் சிறிதுநேரமேனும் வைத்துக்கொண்ட மனத்தையுடையார்க்குப் பிறப்பு இல்லையாம். இப்பிறப்பிலுண்டாகும் வியாதியும் பொருந்திய பசியும் தம்மைவிட்டு நீங்கும் கெடுதலில்லாத புகழுண்டாகும்.

49 கல்லாலந் தணணிமூற்கீழ்க் கல்வித் துறைபயந்த காமர்காட்சி
நல்லானை நல்லா ளொருபாக மாகிய ஞானத்தானை
எல்லாரு மேத்தத் தகுவானை எஞ்ஞான்றும்
சொல்லாதார்க் கெல்லாந் துயரல்லதில்லைத் தொழுமின் கண்டீர்

(இ-ள்) கல்லால மரத்தினுடைய குளிர்ந்த நிழலின் கீழே கல்வியின் துறைகளாகிய ஞானங்களை உபதேசித்த அழகிய தோற்றத்தையுடைய நல்லவனும் நல்லவளாகிய உமாதேவி ஒரு பாகத்திற் பொருந்திய ஞானத்தையுடையவனும், எல்லோராலுந் துதிக்கத் தகுந்தவனும் ஆகிய சிவபெருமானைப் பற்றிப் பேசாதவர்க்குத் துன்பமல்லது வேறில்லை. ஆதலால் அவனை வணங்குங்கள்.

கல்வித்துறை-தத்துவ நெறி.

50 வண்டணி கொண்ட மதுமலர்க் கொன்றை யினமாலை
கொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள் போலப்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தான்
உண்டணி கொண்டநஞ் சுண்பார்க் கமிழ்தா குமே.

(இ ள்) வண்டுகள் அழகாகப் பொருந்திய தேனையுடைய கொன்றை மலர்களாலாகிய மிக்க மாலைகளை யெடுத்தணிந்த சிவந்த சடையில் நுனியையுடைய பிறைச் சந்திரனைப்போல முன்பு அணிகலமாகப் பலருந் தொழுங்கங்கை நீரை வைத்த வனுகிய சிவபெருமானுல் உண்ணப்பட்டு அழகைக்கொண்ட நஞ்சுண்பார்க்கு அஃது அமிழ்தமாகும்.

பெருந்தொகை—முதல் ஐம்பது பாடல்களும்
விளக்கவுரையும் முற்றும்.

மறைமலை தமிழ்ச் சங்கம்